For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• ஏப்ரல் 2023 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் • விலை : ரூ 60 • இதழ் 35



# அவர் ஆளுகை செய்ய வேண்டியது

# ஆசிரியர் சுவடு

கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் உறுப்பினர்களே, இறை மைந்தனாம் இயேசுவின் இனிய நாமத்தில் கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நல்ல வளர்ச்சியினைக் கண்டு வருகின்றது. ஒவ்வொரு மாதமும் புதிய புதிய அறிமுகங்களைப் பெறுகின்றோம். வாசர்கள் மற்றும் உறுப்பினர்கள் தருகின்ற உற்சாகமும், ஆலோசனைகளும் இன்னும் புது வேகத்தோடு கூட நம் சங்கத்தினை முன் நடத்திச் செல்ல உதவுகின்றது.

கடந்த மாதத்திலே திருநெல்வேலி திருமண்டலத்தில் உள்ள பல்வேறு சேகர திருச்சபை மக்களுடன் நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கமும் இணைந்து தபசு நாட்களில் மிஷன் சுற்றுப்பயணம் நடத்த கர்த்தர் உதவினார். பல்வேறு சேகர குருமார்கள் இந்த மகத்தான பணிகளுக்கு தங்களுடைய சபை மக்களை உற்சாகப்படுத்தி அழைத்து வந்தனர். அதேபோல மிஷனெரிகள் பணி செய்த பகுதிகளுக்கு செல்லும் பொழுது அங்கு தற்பொழுது பணி செய்யும் குருமார்கள் சபை மக்களுடன் இணைந்து வந்திருந்த சபை மக்களை உற்சாகமாக வரவேற்றார்கள். நாங்கள் செல்லுகின்ற ஒவ்வொரு இடங்களிலும் நம்முடைய வரலாற்றுச் சங்க உறுப்பினர்கள் அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார்கள். வரும் விடுமுறை நாட்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி மாணவ செல்வங்களை அழைத்து செல்ல திட்டமிட்டுளோம். பாராபரன் அதற்கு உதவி செய்வாராக.

திருச்சபை சரித்திர நூல்கள் மற்றும் நம்முடைய பகுதியில் மகத்தான பணி செய்த மிஷனெரிகளின் வரலாற்று நூல்களை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம். பல புத்தகங்கள் பிரிண்டிங் நிலையில் ஆயத்தமாக இருக்கின்றது. நன்கொடையாளர்கள் கிடைக்கவும் அதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஏற்கனவே திட்டமிட்டபடி ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒவ்வொரு வாரமும் (அழைக்கின்ற அல்லது வாய்ப்பு கிடைக்கின்ற) ஏதாவது ஒரு ஆலயத்தில் நம்முடைய மாத இதழ் கண்காட்சி மற்றும் விற்பனையுடன் சேர்த்து மிஷனரி வாழ்க்கை வரலாறு புத்தகங்களுடன் திருச்சபை சரித்திர நூல்களையும் சபை மக்களுக்கு நேரடியாக கொண்டு செல்ல திட்டமிட்டு வருகின்றோம். புகைப்பட கண்காட்சி நடத்தவும் திட்டமிட்டு வருகின்றோம். அதற்கான தேவைகள் அதிகம் ஜெபிக்கும் உள்ளங்களையும் அதன் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு மாதமும் மாத இதழினை வெளிக்கொண்டுவருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, சந்தா செலுத்தாதவர்கள் செலுத்த கேட்டுக்கொள்கிறேன். தேவைகள் அதிகம் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சந்தா, நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மே மாத தலைப்பாக 'நற்செய்தி பணியின் தேவையும் இன்றைய மிஷனரிகளின் அணுகுமுறைகளும்.' கட்டுரை தலைப்பு கொடுக்கப்படுள்ளது. அது குறித்த ஆய்வுக் கட்டுரைகளை கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாரபரனின் பணியில்

*Manna Selvakumar*

G Pay

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

**தொடர்புகொள்ள** **+91 91767 80001**

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Tinnevelly Christian Historical Society
A/c Number : 1748 020000 3684
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற
எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்
கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com

# உள்ளே...

04 கலாச்சாரம் கடந்த ...
J.ஜான் ஞானராஜ்,
ஆசிரியர், திருநெல்வேலி

06 சேலம் வரலாற்றில் ...
பர்னபாஸ்,
சேலம் வரலாற்றுச் சங்கம்

11 அழகுமலர் அன்னம்மாள்...
அருண் ஜி,
தென்காசி

15 கிளாரிந்தா...
ஆசிரியர்

22 சீயோன் சபை வரலாறு
R. பாலச்சந்திரன் ,
சுரண்டை

24 கண்டோன்மென்ட் புதைகுழி..
ஆசிரியர்

26 புரட்சிப் பெண்...
முனைவர் ஜான்சி பால்ராஜ்,
ஆசிரியர் , திருநெல்வேலி

# கலாச்சாரம் கடந்த மிஷனெரி இயக்கங்கள்

## – ஓர் வரலாற்று பார்வை

**J.ஜான் ஞானராஜ்,**
**ஆசிரியர், திருநெல்வேலி**

ஐரோப்பாவில் இருந்து கலாச்சாரம், பண்பாடு, தட்பவெப்ப நிலை என அனைத்திலும் மாறுபட்ட நிலையைக் கொண்ட இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் நற்செய்திப் பணி செய்யும்படி மிஷனரிகள் புறப்பட்டு வந்தனர். கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் பதினாறாம் நூற்றாண்டில் பிரான்சிஸ்கன் சபை, (Order of Friars Minor) இயேசு சபை (Society of Jesus ) ஆகிய இரு துறவற சபைகளின் மிஷனரிகளும், சீர்திருத்த கிறிஸ்தவத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் லுத்தரன் சபை மிஷனரிகளும், 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலிக்கன் சபை மிஷனரிகளும் புறப்பட்டு வந்து நற்செய்தி அறிவித்தனர். அயல்நாட்டு மிஷனரிகளைப் போன்று நாமும் நற்செய்தி அறிவிக்க புதிய இடங்களுக்கு புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் தென் தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் 19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது.

**ரேனியஸ் ஐயரவர்கள் காலத்தில் அனுப்பப்பட்ட மிஷனரிகள்:**

ரேனியஸ் ஐயரவர்களால் 1834 இல் கொச்சி திருவாங்கூர் சமஸ்தான பகுதிகளில் நற்செய்திப் பணி செய்ய உபதேசிமார்கள் அனுப்பப்பட்டனர். அந்த உபதேசிமார்கள் மூலம் நிறுவப்பட்ட சபைகள் 1839 முதல் 1871 வரை அந்த இடங்களுக்கு சி. எம். எஸ் மிஷன் சங்கத்தின் மூலம் நற்செய்திப் பணி செய்வதற்காக அனுப்பப்பட்டு சிறப்பாக நற்செய்தி பணியாற்றிய ஹென்றி ஹார்லி ஐயரவர்களின் மூலம் பெரும் சபைகளாய் உருவெடுத்தது.

**மதுரை அமெரிக்க மிஷனுக்கு உபதேசிமார்கள் அனுப்பப்படுதல்:**

1834 இல் மதுரையில் அமெரிக்கன் மிஷன் தொடங்கப்பட்டபோது அவர்களுக்கு ஊழியத்தில் உதவி செய்யும்படியாக திருநெல்வேலி சி. எம். எஸ் உபதேசிமார்கள் ரேனியஸ் ஐயரவர்களால் 1834 இல் அனுப்பப்பட்டனர். 1854 வரை இருபது ஆண்டுகள் திருநெல்வேலி சி. எம். எஸ் உபதேசிமார் மதுரை அமெரிக்கன் மிஷனில் நற்செய்திப் பணியைச் சிறப்பாக செய்தனர்.

**1852 இல் திருவாங்கூர் சமஸ்தானத்தில் செய்யப்பட்ட ஊழியம்:**

நல்லூர், சுரண்டை மற்றும் பாவூர்சத்திரம் வட்டார கிராமங்களில் நற்செய்தி பணி செய்த சபை ஊழியர்கள் தாமாக முன்வந்து திருவாங்கூர் சமஸ்தானத்தை சார்ந்த எல்லையோர மலைப் பகுதி கிராமங்களில் வசித்த மலையரசன் எனும் மக்கள் கூட்டம் மத்தியில் நற்செய்தி பணி செய்தார்கள். அவர்களை நல்லூர் மற்றும் சுரண்டை வட்டார மிஷனரிமாரர் ஊக்குவித்தார்கள். அவர்களால் உருவான சபைகள் பிற்காலத்தில் கோட்டயம் சி. எம். எஸ் மிஷனரிமார்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டன.

**பிற கலாச்சாரம் கடந்த மிஷன் இயக்கங்களில் திருநெல்வேலியின் பங்களிப்பு**

**திருநெல்வேலி சி .எம்.எஸ் மிஷன் பணித்தளம் சார்பாக**

1. சிலோன் கூலி மிஷன்
2. மொரிசியஸ் மிஷன்
3. ஆந்திராவின் ‘கொய்’ மிஷன்

ஆகிய மிஷன் சங்க மிஷன் பணித்தளங்களுக்கு திருநெல்வேலியில் இருந்து சி. எம். எஸ் மிஷன் சங்க குருமார்களும் உபதேசிமார்களும் நற்செய்திப் பணி செய்ய புறப்பட்டு சென்றனர்.

**வட நெல்லை சி. எம். எஸ் மிஷன் பணித்தள தொடக்கம்**

1854 பெப்ரவரியில் ராக்லாந்து ஐயரவர்கள் மூலம் வட நெல்லை சி. எம். எஸ் மிஷன் பணித்தளம் தொடங்கப்பட்டது. அவரோடு D.D.ஃபென், R.R.மெடோஸ் ஆகிய ஐரோப்பிய மிஷனரிமார் மற்றும் கொர்நேலியு உபதேசியார் ஆகியோர் இணைந்து வட நெல்லை ஊழியத்தில் ஈடுபட்டனர். அக்கால நெல்லை மாவட்டம் தற்போதைய திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது. தற்போதைய விருதுநகர் மாவட்டமும் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, மாவட்டங்களின் வடக்கு எல்லையோர கிராமங்களும் அக்காலத்தில் வட நெல்லை என அழைக்கப்பட்டது. வட நெல்லை பணித்தளத்தின் தலைமை இடமாக சிவகாசியும் பிற முக்கிய நகரங்களாக வாகைகுளமும், பனையடிப்பட்டியும் காணப்பட்டது.

**தென் திருநெல்வேலி சி.எம்.எஸ் மிஷன் வட்டாரங்களில் இருந்து வடநெல்லைக்கு:**

மெஞ்ஞானபுரம், சாத்தான்குளம், நல்லூர், சுரண்டை, பண்ணைவிளை பாளையங்கோட்டை ஆகிய தென் நெல்லை சி.எம்.எஸ் மிஷன் வட்டாரங்களில் இருந்து வடநெல்லைக்கு உபதேசிமார்கள் ஆண்டுதோறும் புறப்பட்டு சென்றார்கள். ஓரிரு மாதங்கள் அங்கு தங்கியிருந்து நற்செய்தி பணியாற்றி விட்டு திரும்பி வருவதாக அவர்களுடைய பணி இருந்தது. அவர்களது நற்செய்தி பணியால் வடநெல்லையில் சபைகள் உருவாகிற போது அந்த சபைகளை பராமரிக்கிற பணி அந்த சபைகளில் தேவாலயங்களை கட்டுகிற பணி ஆகியவற்றையும் தென் நெல்லை சபைகளே பொறுப்பெடுத்து செய்தனர்.

**திருநெல்வேலி சுதேச திருச்சபை மிஷனரி கழகம் உருவாகுதல்:**

17.01.1855 அன்று பாளையங்கோட்டையில் திருநெல்வேலி சி. எம். எஸ் மிஷன் வருடாந்திர கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வடநெல்லை பகுதியில் மிஷன் ஊழியத்தை விரிவுப்படுத்துவதற்காக திருநெல்வேலி சுதேச திருச்சபை மிஷனரி கழகம் - Tirunelveli Native Church Missionary Association எனும் மிஷனரி சங்கம் உருவாக தென் நெல்லை குருவானவர் ஜான் தேவசகாயம் ஐயரவர்கள் தீர்மானத்தை முன்மொழிய, வட நெல்லை குருவானவர் மேடோஸ் ஐயரவர்கள் வழிமொழிந்து வட நெல்லை ஊழியங்களை பகிர்ந்து கொண்டார்கள். இப்பணியை இந்தியா முழுவதும் கொண்டு செல்ல வேண்டும் என்ற தீர்மானத்தை தென் நெல்லை குருவானவர் இயேசுதாசன் ஜான் ஐயரவர்கள் முன்மொழியே வட நெல்லை குருவானவர் டி.ஜி பேரன்புரூக் ஐயரவர்கள் வழிமொழிந்தார்கள்.

**இந்திய மிஷனரி சங்கத் தொடக்கம்:**

வெள்ளாளன்விளையைப் பூர்வீகமாகக் கொண்ட சாமுவேல் அசரியா சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் 1893-1895 இல் படித்துக் கொண்டிருந்த பொழுது அங்கிருந்து கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தில் - YMCA -Young Men Christian Association இல் உறுப்பினராக இருந்து சிறப்புற பணி செய்து வந்தார். அக்காலத்தில் YMCA தலைவராக டேவிட் மக்கொனாபி செயல்பட்டு வந்தார். அவர் சாமுவேல் அசரியா அவர்களுடைய செயல்பாடுகளை குறித்து நன்கு அறிந்தவர். சாமுவேல் அசரியாவை 1895 மார்ச்சில் சென்னை கிளை YMCA செயலாளராக்கினார். 1896 இல் தென்னிந்தியாவிற்கான YMCA செயலாளராக்கினார். YMCA மூலமாக அவருக்கு பல இடங்களில் இருந்தும் நட்புறவுகள் கிடைத்தது. உலக அளவில் பல இடங்களுக்குச் செல்லவும் நற்செய்தி பணி காரியங்களை பார்வையிடவும் வாய்ப்பு கிடைத்தது

**யாழ்பாணத்தில் கிடைத்த புதிய தரிசனம்**

YMCA பணி மூலமாக யாழ்ப்பாணத்திற்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது யாழ்ப்பாணத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி சுதேச மிஷனரி சங்கம் ஒன்றை நிறுவி இருந்தனர். அந்த மிஷனரி சங்கம் மூலமாக தமிழ்நாட்டைச் சார்ந்த தொண்டி நகரத்தை மையமாக வைத்து ஊழியம் செய்ய மிஷனரிகள் அனுப்பப்பட்டிருந்தனர். இதைக்கண்ட சாமுவேல் அசரியா திருநெல்வேலியில் இருந்தும் சுதேச மிஷனரி சங்கம் உருவாக வேண்டும் என விரும்பினார்.

**ஒருமித்த கருத்து கொண்டவர்கள் இணைந்து செயல்படுதல்:**

சாமுவேல் அசரியாவுக்கு பாளையங்கோட்டையில் அனேக நல்ல நண்பர்கள் இருந்தனர். அவர்களிடம் திருநெல்வேலியில் இருந்து மிஷனரி சங்கம் உருவாக வேண்டும் என்ற தமது கருத்தை அசரியா அவர்கள் சொல்லுகிற பொழுது அவர்கள் அனைவரும் அதே போன்று ஒருமித்த கருத்தை கொண்டிருந்ததை அவர்கள் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ள முடிந்தது.

அதே நேரத்தில் திருநெல்வேலி மிஷன் சபைகளே தன் ஆதரவில் இயங்காமல் லண்டனை தலைமையிடமாகக் கொண்ட சி .எம் .எஸ் மிஷன் சங்க ஆதரவில் நடைபெறுகிற பொழுது நாம் தனியாக மிஷனரி சங்கத்தை தொடங்கி நடத்த முடியுமா? என்ற வினாக்களையும் சிலர் தொடுத்தனர்.

1902 கடைசி முதல் இதற்கான முன் முயற்சிகள் அனைவராலும் முன்னெடுக்கப்பட்டது. நற்போதகத்தில் புதிய மிஷன் சங்க ஊழியத்திற்கு என கொடுக்கப்பட்ட பிரசுரம் சி .எம் .எஸ் மாதாந்திர இதழாக 1849 முதல் வெளிவந்து கொண்டிருந்த நற்போதகத்தில் 1903 பிப்ரவரி மாத இதழில் 'புறதேச மிஷன் வேலை செய்ய அழைப்பு' என்ற தலைப்பில் ஒரு பிரசுரம் கொடுக்கப்பட்டது. அதில் புறதேச மிஷன் ஊழியத்தில் நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள் விவரிக்கப்பட்டு இருந்தது. அது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இறுதி கட்டளை என்பது விளக்கப்பட்டு இருந்தது. நற்போதகம் மாத இதழை வாங்காதவர்களுக்கும் இந்த செய்தி தெரிய வேண்டும் என்பதற்காக அந்த பிரசுரம் தனியே அச்சடிக்கப்பட்டும் கொடுக்கப்பட்டது. 1903 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற வேகமான முயற்சிகள் 1903 பிப்ரவரி மாதத்தில் சங்க கூட்டம், கவுன்சில் கூட்டம் ஆகியவற்றுக்காக திருமண்டலம் முழுவதிலும் இருந்து ஊழியர்கள் பாளையங்கோட்டைக்கு வரும் சூழ்நிலை இருந்தது. அவர்களிடம் புதிய மிஷனரி சங்கம் உருவாக்கப்படுவது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அவர்களோடு இணைந்து ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அனைவரும் மூன்று நாட்கள் கூடி புதிய மிஷனரி சங்கம் நிறுவ அதற்கான சட்ட திட்டங்கள் குறித்து தீர்மானித்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தின் திருநெல்வேலி சி.எம்.எஸ் பணித்தளத்தின் தலைமை மிஷனரி மற்றும் மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவர்- DCC Chairman ஆக இருந்த கனம்.E.S.கார் ஐயரவர்கள் மற்றும் கனம். பிரிட் ஐயரவர்கள் கனம். டக்ளஸ் ஐயரவர்கள் ஆகியோரோடு இதுகுறித்து கலந்து ஆலோசனை செய்யப்பட்டது.

**இந்திய மிஷனரி சங்க தொடக்க நாள்:**

1903 பெப்ரவரி 12 ஆம் நாள் திருநெல்வேலியில் இருந்து புதிய மிஷனரி சங்கம் உருவாக வேண்டும் என ஆர்வம் கொண்டிருந்த அனைவரும் பாளையங்கோட்டை Y.M.C.A. அறையில் ஒன்று கூடினர். இக்கூட்டத்தில் 16 இடங்களில் இருந்து 20 லே உறுப்பினர்களும் எட்டு குருமார்களும் வந்திருந்தார்கள். அக்காலத்தில் பாளையங்கோட்டை அஸ்போர்ன் பள்ளி கட்டிட அறையே மாலை நேரத்தில் Y.M.C.A. அறையாக செயல்பட்டு வந்தது. அங்கு இக்கூட்டம் நடைபெற்றது. இந்திய மிஷனரி சங்கம் உருவாக சாமுவேல் அசரியா அவர்கள் தொடக்க முயற்சியை சிறப்பாக செய்தவர்கள் என்றாலும் இந்திய மிஷனரி சங்கம் உருவாக 28 பேர் கொண்ட குழு காரணமாக இருந்தது என்பதை அதன் தொடக்கக் கூட்டத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம்.

**இந்திய மிஷனரி சங்கம் மூலம் மிஷனரிகள் அனுப்பப்படுதல்:**

1904 இல் இந்திய மிஷனரி சங்க முதல் மிஷனரியாக கனம். சாமுவேல் பாக்கியநாதன் ஐயரவர்கள் ஆந்திர மாநிலம் தோர்ணக்கல்லுக்கு புறப்பட்டு சென்றார்கள். இரண்டாவது மிஷனரியாக 1905 இல் தேவசகாயம் அவர்களும் மூன்றாவது மிஷனரியாக 1906 இல் கனம்.சாமுவேல் பாக்கியநாதன் ஐயரவர்களின் உடன் பிறந்த தம்பி சாலமோன் பாக்கியநாதன் அவர்களும் தோர்ணக்கல் புறப்பட்டு சென்றார்கள்.

## சேலம் வரலாற்றில் திரு.ஜான் சார்லஸ் பிட்சார்ட்ஸ்

# பங்கும் பணிகளும்–அழிவின் விளிம்பில் அவரது மரபுரிமை சுவடுகள்.

பர்னபாஸ்,
சேலம் வரலாற்றுச் சங்கம்

**துன்பங்களின் ஊடே புடமிடப்பட்டவர் (Made Perfect through Suffering) : அவரது நினைவுச் சின்னம் (His Monument) :**

11-8-2011 அன்று சேலம் 4 ரோடு பெரமனூர் சீர்திருத்த கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில், புதர்களுக்கு மத்தியில் அன்று ஒரு சாம்பல் நிற கிரானைட் கல்லறையைக் கண்டுபிடித்து, வியப்பும் ஆர்வமும் தூண்ட, அதில் எழுதப்பட்டிருந்த ஆங்கில வாசகங்களைப் படித்துப் பார்த்த போதுதான் கண்டறிந்தோம், இது திரு.ஜான் சார்லஸ் பிட்சார்ட்ஸ் (Mr.John Charles Pritchard) என்பவரது கல்லறை என்று.

**பிட்சார்ட்ஸ் ரோடு (Pritchard's Road) :**

இவர் பெயரில் தான் சேலம் மாநகரில் அஸ்தம்பட்டி மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி (Hasthampatty Water Tank) அருகில் அந்த சாரதா கல்லூரி சாலையையும் (Saradha College Road), அஸ்தம்பட்டி ரவுண்டானாவிலிருந்து சேலம் டவுன் பழைய பஸ் நிலையம் செல்லும் செரி ரோட்டையும் (Cherry Road), குறுக்காக இணைக்கும் சாலை 'பிட்சாட்ஸ் ரோடு' (Pritchard's Road) என்ற பெயரில் உள்ளது என்பதையும் அறிந்து வியந்தோம்.

பொதுப் பணித்துறை அலுவலர் குடியிருப்பு, மண்டல வணிகவரித் துறை அலுவலகம், ஆகியவற்றால் இந்தப் பகுதியில் இந்த சாலை இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. காலஞ்சென்ற தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஆட்சிக்காலத்தில் இந்த சாலையின் பெயரை மாற்றக் கோரி வந்த விண்ணப்பங்கள், தொடந்து நடந்த முயற்சிகளை அறிந்த அம்மையார் அதற்கு உடன்படாமல் அந்த சாலையின் பெயரை எந்த காரணம் கொண்டும் மாற்றக்கூடாது என்று திட்டமும் தெளிவுமாக உத்தரவு பிறப்பித்தார் என்று சொல்லப்பட்டது. அதனால் தான் இந்த சாலை துவங்கும் இடத்தில் அஸ்தம்பட்டி மேல்நிலை குடிநீர் தொட்டி அருகே எதிர் எதிரே இந்த சாலையின் இருமறுங்கும் இரண்டு 'Reflector Name Board' அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டது. மேலும் இந்த சாலை செரி ரோட்டோடு இணையும் இடத்திலும் ஒரு பெயர்ப் பலகை Reflector Name Board வைக்கப்பட்டது. சமீபத்தில் இந்த சாலை புதுப்பிக்கப்பட்டு முதன்முதலாக தமிழகத்தின் 'Plastic Road' இங்குதான் போடப்பட்டது. இன்று சேலம் மாநகரில் ஆங்கிலேயர்கள் பெயரில் உள்ள ஒரு சில சாலைகளில் இதுவும் ஒன்று. இன்னும் எத்தனை காலத்திற்கு இந்த பெயர்கள் மாற்றப்படாமல் தொடரும் என்பதை நாம் அறியோம். ஏற்கெனவே ஈரோட்டின் பிரதான சாலையான 'பிரப் ரோடு' (Brough Road) காரணம் ஏதும் அறிவிக்கப்படாமல் அதிரடியாக கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் பெயர் நீக்கம் செய்யப்பட்டு 'மீனாட்சி சுந்தரனார் சாலை' என்று அன்று அந்த ஈரோடு வாழ் கிறிஸ்தவர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மறுபேர் சூட்டப்பட்டது. அங்கே மீண்டும் **'பிரப் ரோடு'** என்ற பெயரே வரவேண்டும் என்று சேலம் வரலாற்றுச் சங்கம் போராட்டங்களை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**பிட்சார்ட்ஸ் கல்லறை (Pritchard's Mausoleum ):**

ஆனால் அந்தோ நமது சேலம் C.S.I திருச்சபைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சேலம் 4 ரோடு பெரமனூர் சீர்திருத்த கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில் திருவாளர் ஜான் சார்லஸ் பிட்சார்ட்ஸ் அவர்களின் கல்லறையை என்றென்றும் காப்பாற்றி வரலாற்றின் சாட்சியாக, திரு.J.C.பிட்சார்ட்ஸ் அவர்களின் நிலைத்திருக்கும் மரபுரிமை சான்றாக, இந்த சாம்பல் நிற கிரானைட்ஸ் கல்லறையை காப்பாற்றி நிலைநிறுத்த முடியுமா என்பதே நம் முன் நிற்கும் கேள்வி.

இன்று நெருக்கி வரும் புதிய கல்லறைகள் நடுவில் மண்ணில் புதைந்து வருகிறது நமது 'பிட்சார்ட்ஸ் கல்லறை'!. புதியன புகுதலால், பழையன கழியுமோ?

**திரு.ஜான் சார்லஸ் பிட்சார்ட்ஸ் (Mr.John Charles Pritchard -1849-1905):**

வரலாற்று அறிஞர் அருள்திரு.பிலிப் K.மல்லி ஐயர் சொன்னது :

திரு.J.C.பிட்சார்ட்ஸ் அவர்களைப் பற்றி தென்னிந்திய திருச்சபை கோவைத் திருமண்டலத்தின் மேனாள் ஆயர் அருள்திரு.பிலிப் K.மல்லி அவர்கள் எனக்கு எழுதி அனுப்பிய கடிதத்திலிருந்து: 'ஜான் சார்லஸ் பிட்சார்ட்ஸ் அவர்கள் லண்டனிலுள்ள Middle Temple என்ற வழக்குரைஞர் மன்றத்தில் 1869 ஆம் ஆண்டு சேர்ந்து 1872 ஆம் ஆண்டு வழக்குரைஞராகப் பதிவு பெற்றார். 1873 ஆம் ஆண்டு சேலம் வந்த அவர் 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பான வழக்குரைஞர் பணியாற்றினார் என்பதாக அறியப்படுகிறது. பின்னர் ஓய்வுபெற்ற அவர் 1905 ஆம் ஆண்டு மே மாதம் வேதனை மிகுந்த உடல்நலக் குறைவினால் மரணமடைந்தார். சேலம் Bar Council வரலாற்று ஆவணங்களில் இவரின் சீரிய பணிகள் குறித்துக் கண்டறியலாம் என்று எண்ணுகிறேன். இந்து நாளிதழ் ஆவணக் காப்பகத்தில் மே 12,1905 நாட்குறிப்பிலும் (The Hindu, May 12,1905) கூடுதல் தகவல்கள் இருக்கக்கூடும்' என்பதே.

**வரலாற்று அறிஞர் F.J.ரிச்சர்ட்ஸ் பார்வையில் :**

சேலம் மாவட்டத்தின் பிரிட்டீஷ் ஆட்சித் தலைவராக இருந்தவரும் (1903), வரலாற்று அறிஞருமான திரு.F.J.ரிச்சர்ட்ஸ்,I.C.S., தனது சேலம் வரலாற்று ஆதார நூலான 'Gazetteer of the Salem District - Vol.1- Part 2 ,Madras,1918' பக்கம் :251 ல் சேலம் 4 ரோடு பெரமனூர் சீர்திருத்த கிறிஸ்தவக் கல்லறைத் தோட்டத்தில் (The New Cemetery on the Omalur Road) உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லறைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, திரு.J.C.பிட்சார்ட்ஸ் கல்லறையைப் பற்றி (J.C.Pritchard,Barrister at Law) குறிப்பிட்டதோடு கூடுதலாக அந்த பக்கத்தில் அவர் எழுதி வைத்த பின் குறிப்பை இங்கே அப்படியே உங்கள் வாசிப்பிற்குத் தருகிறேன்: ' John Charles Pritchard was admitted to the Middle Temple in 1869 and called to the Bar in 1872.He came to Salem in 1873,in the strength of early manhood, and at once took his place as one of the leaders of the Bar, and maintained it with ever increasing respect for a period of over 25 years.In may 1905 he passed away after a prolonged and painful illness borne with heroic fortitude. '

**சேலத்தில் சிறந்த சட்ட மாமேதை :**

சேலம் நகரின் மையப் பகுதியில் அன்று ஆங்கிலேய அதிகாரிகளின் முயற்சிகளால் கட்டப்பட்டு வந்த சேலம் கிறிஸ்துநாதர் ஆலயத்தின் (இன்றைய சேலம் C.S.I.கிறிஸ்துநாதர் ஆலயம்) கட்டுமான பணிக்கு தனது நன்கொடையையும், தனது ஆதரவையும் வழங்கியுள்ளார்.(P.no.295,The Church in Madras,Vol.3,- Rev.Frank Penny,John Murray, london,1922) தொடர்ந்து அந்த ஆலயத்தில் முக்கிய உறுப்பினராக இருந்த திரு.J.C.பிட்சார்ட்ஸ் சேலத்திலும்,சென்னை இராஜதானியிலும், இந்திய அளவிலும் தலைசிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார்.சேலத்தில் அவர் சிறப்பாக வாழ்ந்து வரும்போது அவரது சிறுவயது மகன் இறந்த புத்திரசோகம் அவரை வாட்டி வதைத்தது.அந்த அவரது மகனின் கல்லறையையும் நாங்கள் மண்ணில் புதைந்திருந்த நிலையில், 4ரோடு கல்லறைத் தோட்டத்தில் கண்டறிந்தோம். அதுவும் சாம்பல் நிற கிரானைட் சிலுவையின் எஞ்சிய அடிப்பகுதி மட்டுமே. விஷமிகளின் அட்டூழிய (Vandalism) செயலால் அழிந்துபோன கல்லறைகளில் இதுவும் ஒன்று.

தனது ஓய்விற்குப் பின் சேலம் நகராட்சியின் ஆணையாளராக பதவி ஏற்று சிறப்பாக பணியாற்றி அனைவரின் அன்பையும் பாராட்டையும் பெற்ற திரு.J.C.பிட்சார்ட்ஸ் அன்றைய சேலம் நகரின் சுகாதார மேம்பாட்டிற்காக சிறப்பான பணிகளை மேற்கொண்டு வரும் வேளையில் தண்டுவட மரப்பு நோய் ( Disseminated sclerosis ) என்ற நோயினால் படுத்த படுக்கையானார்.

**சேலத்தின் பெருமைமிகு புதல்வர் :**

நெடுங்காலமாக வேதனை தரும் இந்த நரம்பியல் நோயினால் பாதிக்கப்பட்ட அவர் மே மாதம் 12 ஆம் நாள் 1905 ஆம் ஆண்டு தனது 55 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.திரு. பிட்சார்ட்ஸ் அவர்களின் பூதஉடல் சேலம் 4 ரோடு பெரமனூர் சீர்திருத்த கல்லறைத் தோட்டத்தில் அன்று அது ( New Cemetery on the Omalur main Road) அனைத்து மரியாதைகளுடனும், கிறிஸ்தவ சமய சடங்குகளுடனும், நல்லடக்கம் செய்யப்பட்டது. சேலம் கிறிஸ்துநாதர் ஆலயத்தின் அன்றை லே டிரெஸ்ட்டி (Lay Trustee) திருவாளர் ஸ்பென்சர் அசென்டர் (Lay Trustee Mr.Spencer Asunter) அடக்க ஆராதனை செய்ய, அன்றைய மாபெரும் சட்ட மேதை மண்ணில் விதைக்கப்பட்டார்.

**இவரது கல்லறையில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:**

John Charles Pritchard
Barrister - At - Law    Born Aug.4th.1849
At Rest May 12th.1905    Aged 55 years
Made Perfect Through Suffering

2-5-2017 அன்று திரு.J.C.பிட்சார்ட்ஸ் அவர்களின் 112ஆவது நினைவு நாள் அனுசரிப்பில் சேலம் வரலாற்றுச் சங்கத்தினர்.

**என்றும் நிலைக்கும் மரபுரிமை சான்று:**

இவரது சிறப்பான பணிகளை சேவைகளை நினைவுகூர்ந்த அன்றைய சேலம் நகராட்சி மாமன்ற நிர்வாகம் சேலம் அஸ்தம்பட்டி பகுதியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அருகில் சாரதா கல்லூரி சாலையிலிருந்து செரி ரோட்டை குறுக்காக இணைக்கும் சாலைக்கு 'பிட்சார்ட்ஸ் ரோடு' என்று இவரது பெயரைச் சூட்டி நன்றி பாராட்டியது. சேலம் நகராட்சியில் நிர்வாகத் தலைமையில் பணிசெய்பவர்கள் தங்கள் பணிகாலத்திலேயே மரணமடைய நேரும்போது அவர்களின் சேவையைப் பாராட்டி நினைவு கூர்ந்து சேலம் நகரில் அவர்கள் நினைவாக சிறிய தூரமான முக்கிய சாலைகளுக்கு அவர்கள் பெயரை வைத்து, தங்கள் சிறப்பான சேவைப் பணிகளின் மத்தியில் இறந்துபோன தலைவர்களின் நினைவை போற்றும் மரபு சேலத்தின் சிறப்பு.





திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரி தாலுகாவில் டோனாவூர் என்ற கிறித்தவ வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர் உள்ளது. இவ்வூர் ஜெர்மன் நாட்டு கிறித்தவ மிஷனெரியான சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் ரேனியஸ் என்பவரால் 1827 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதி ஏற்படுத்தப்பட்டது. அவ்வூரில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் 1895 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு கிறிஸ்தவ சமயப் பணி செய்வதற்கென்று வந்த ஏமிக்கார்மைக்கேல் என்ற ஐரோப்பிய பெண் மிஷனெரி, அங்கிருந்து சமயப்பணியோடு சமூகப்பணியும் செய்தார். அங்கு அவர் கைவிடப்பட்ட மற்றும் தேவதாசி முறைக்கு எதிராக அதிலிருந்து மீட்கப்பட்ட பெண்களுக்கான காப்பகம் ஒன்றை **டோனாவூர் ஐக்கியம்** என்ற பெயரில் ஏற்படுத்தினார். அக்காப்பகம் தனியொரு ஊராகவே டோனாவூரின் தென்பகுதியில் அமைந்துள்ளது. அதில் மிக அழகிய வடிவமைப்பில் கட்டப்பட்ட வீடுகளும் நேர்த்தியாக நடப்பட்டு வளர்க்கப்பட்ட மரம் செடி கொடிகளும் அவ்விடத்தை மற்ற ஊர்ப்புறங்களில் இருந்து வேறுபடுத்திக்காட்டும் சிறப்புடையது. அங்கு வாழும் மக்களுக்காக அந்த மிஷனெரியால் கட்டப்பட்ட அழகிய ஆலயம் இந்திய ஐரோப்பிய கட்டடக்கலைக்கு சான்றாக உயர்ந்து நின்று கொண்டிருக்கிறது. இந்த ஆலயம், தமிழகக் கட்டிட அமைப்பை ஒத்ததாக இல்லை. இது இன்றும் கேரள மாநிலத்தில் உள்ள பழமையான அழகிய வேலைப்பாடு மிகுந்த அரண்மனைகளின் தோற்றத்தின் சாயலில் உள்ளது.

இதற்குப் பெருங்காரணம் இந்தக் கட்டிடத்தின் கூரை ஓடுகள் திருவித்தாங்கூர் கட்டிடக் கலைஞர்களால் அங்குள்ள அரண்மனைகளில் பயன்படுத்தப்படும் வடிவமைப்போடு இந்த ஆலயத்திற்கென்றே பிரத்யேகமாகச் செய்யப்பட்டு கொண்டுவரபட்டவை. அங்கிருந்தே அவ்வாலயத்திற்குத் தேவையான அனைத்து கூரை ஓடுகளும், தள ஓடுகளும், ஆலய கட்டுமானத்திற்கு தேவையான தேக்கு மரக்கம்புகளும் கொண்டுவரப்பட்டு மிக அழகாக கட்டப்பட்டுள்ளது. அத்தோடு திருவித்தாங்கூர் கட்டிடக் கலைஞர்கள் இத்தகைய கட்டிடக்கலைகளை சீனர்களிடமிருந்து கற்றதாகவும் ஏமிக்கார்மைக்கேல் தெரிவிக்கிறார் (Gold cord p- 298).

இவ்வாலயத்தின் ஆல்ட்டர் என்று சொல்லப்படும் ஆலயத்தின் மிக முக்கியப்பகுதி அழகிய வேலைப்பாடோடு மனங்கவரும் தோற்றமைப்பில் உள்ளது. இந்த ஆலயத்தின் அருகில் மிக அழகான தோற்ற அமைப்பில் நான்கு புறமும் திறந்த அமைப்பில் **ஐக்கிய அறை** என்ற பெயரில் ஓர் அறையும் உள்ளது. இதன் தனிச்சிறப்பு என்னவென்றால் ஆலயத்திற்குள் செல்வதற்கு முன்பு அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு அல்லது மனக்கசப்பில் சமாதான குறைவில் இருப்பவர்கள் அந்த அறையில் நின்று ஒருவர் குறையை ஒருவர் மன்னித்து, மறந்து சமாதானமடைந்த பின்னரே ஆலயத்திற்குள் செல்ல வேண்டும் என்ற ஏமிக்கார்மைக்கேலின் அன்புக் கட்டளைக்கிணங்க பட்டப்பட்டதாகும். அந்த அறையின் முகப்பில், **அவர் ஆளுகை செய்ய வேண்டியது** என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது.

கிறிஸ்தவத்தின் மிகச் சிறந்த போதனைகளுள், **ஒப்புரவாகுதல்** என்ற உயரியப் பண்பாகும். அதைக் குறித்து இயேசு தம் சீடர்களுக்கு கற்பிக்கும்போது, **நீ பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து** (விவிலியம், மத்தேயு 5:23,24) என்று வலியுறுத்தினார்.

இதனடிப்படையில் மிஷனெரி ஏமிக்கார்மைக்கேல் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த முறையை இன்றுவரை அம்மக்கள் கடைபிடித்தும் வருகின்றனர்.

# ஐக்கிய அறை

முனைவர். ஜான்சி பால்ராஜ்,
ஆசிரியர் , திருநெல்வேலி



# வரலாற்றுச் சுற்றுப்பயணம்

தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டலம் சாம்பவர்வடகரை சேகர திருச்சபை மக்கள் மிஷன் வரலாற்று சுற்றுப்பயணமாக கீழ் நெல்லை மற்றும் தென் நெல்லை பகுதிகளில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு திருச்சபையின் சேகர குரு அருள்திரு. ஜெபரத்தினம் அவர்கள் தலைமையில் நான்கு மினி பேருந்துகளில் சுமார் 110 பேர் வந்திருந்தார்கள். அவர்களை முதலாவதாக நெல்லை திருச்சபை உருவாக காரணமாக இருந்த குளோரிந்தாள் ஆலயம், நினைவிடம், அங்கு விதைக்கப்பட்ட மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் நினைவு கூர்ந்தோம். குறிப்பாக சாயர்புரம் உருவாக காரணமாக இருந்த சாமுவேல் சாயர் அவர்கள் நினைவிடம் பார்த்தோம். அதன் பின்பு பாளையம்கோட்டையில் உள்ள மில்டரி லைன் ஆலயத்தில் உள்ள பேராயர். சார்ஜெண்ட் மற்றும் வேதாகம மொழிபெயர்ப்பு பணி செய்த கனம். ஹென்றி பவர் நினைவிடம் மற்ற மிஷனெரிகளின் நினைவிடங்களையும், அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூர்ந்தோம். காலை உணவருந்தினோம்.

பின்னர் அங்கிருந்து தூத்துக்குடி நாசரேத் திருமண்டல கதீட்ரல் பேராலயம் சென்றோம். பேராலய தலைவர் அருள்திரு. மார்காசியஸ் ஐயரவர்கள் சிறப்பாக வரவேற்று நாசரேத் சபை உருவான விதம் ஆர்தர் மார்காஷிஸ் காலரா காலத்தில் ஆற்றிய பணிகள் மற்ற மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் விவரித்தார்கள். வரலாற்றுச் சங்க உறுப்பினர் மன்னா செல்வகுமார் திருச்சபை உருவான விதம் பற்றி விவரித்து பின்னர் நினைவிடங்களையும் அவர் வசித்த இடத்தையும் பார்த்தோம்.

அதன் பின்பு தென் நெல்லை அப்போஸ்தலர் கனம் ஜாண் தோமாஸ் அவர்கள் செய்த பணிகளையும் நினைவிடத்தையும் பார்த்தோம். அங்கு சேகர தலைவர் சார்பாக அருள்திரு. ஜெபதுரை அவர்கள் மற்றும் உபதேசியார் வரவேற்று உபசரித்தார்கள். மகமை கமிட்டி தலைவர் திரு. ஜெயபோஸ், திரு. சொர்ணராஜ், வரலாற்றுச் சங்க உறுப்பினர்கள் பேரா. குட்டி ஜெஸ்கர் அவர்களும் ஆசிரியர். கெர்சோம் ஜெபராஜ் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக ஏற்படுத்தி இருந்தார்கள்.

அங்கிருந்து நெல்லையின் முதல் இரத்த சாட்சி தாவீது சுந்தரானந்தம் உருவாக்கின முதல் கிறிஸ்தவ கிராமத்தை பார்வையிட சென்றோம். அங்கு சேகர தலைவர் அருள்திரு ஜேசுவடியான் துரைசாமி அவர்கள் சிறப்பாக வரவேற்று அவர் தாவீது சுந்தரானந்தம் தடிக்கம்பு சேனையின் மூலமாக திருச்சபை எப்படி திருச்சபை மக்களை பாதுகாத்தார் என்றும் அவர் செய்த திருச்சபை பணிகளையும் விவரித்தார். அங்கு ஆலய புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது குறிப்பிடத்தக்கது. பெருமன்ற உறுப்பினர் திரு.சாந்தராஜா மற்றும் கமிட்டி உறுப்பினர்கள்










சிறப்பாக வரவேற்று உபசரித்தார்கள். வரலாற்றுச் சங்க உறுப்பினர் திரு. அபிஷேக் அவர்களுக்கும் நன்றி.

பின்னர் அங்கிருந்து கனம். ரேனியஸ் மற்றும் கனம். முல்லர், பேராயர். சார்ஜென்ட் அவர்கள் பணி செய்த சுவிஷேசபுரம் சென்றோம். மதிய உணவு மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். சேகர தலைவர் அருள்திரு. D. வேதன்பு ஐயரவர்கள் அங்கு பணி செய்த மிஷனெரி பணிகளை குறித்தும் அநேக வரலாற்று காரியங்களையும் தற்பொழுது நடைபெறும் பணிகள் குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். உதவிசெய்த கமிட்டி அங்கத்தினர்கள் மற்றும் உபதேசியார் ஜெபராஜ் மற்றும் மாணவர்களுக்கு நன்றி பின்பு ஐயரவர்கள் ஜெபித்து வழி அனுப்பி வைத்தார்கள்.

அதன் பின்பு திராவிடம் என்ற இனத்துக்கு மூல முகவரி தந்த திராவிட ஒப்பிலக்கண தந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவிடம் சென்றோம். சேகர தலைவர் அருள்திரு .JTK. பர்னபாஸ் ஐயரவர்கள் வரவேற்றார்கள். 4.30, மணிக்கு பரி. திருவிருந்து ஆராதனை நடைபெற்றது. பின்பு பேராயர் கால்டுவெல் நினைவிடத்தையும் எலைசா கால்டுவெல் செய்த பணிகளையும் நினைவுபடுத்தி வந்தோம்.

இரவு 8.30 மணிக்கு திருநெல்வேலி கதீட்ரல் பேராலைய தலைவர் சார்பாக உதவி குருவானவர் அருள்திரு. பொன்ராஜ் அவர்கள் வரவேற்றார்கள் அங்கு சபை மக்களுக்கு இரவு உணவு ஆயத்தம் செய்யப்பட்டு இருந்தது. இந்த மிஷன் வரலாற்று பயணத்திற்கு அனைத்து வகையிலும் உதவி செய்த அனைவருக்கும் மற்றும் அருள்திரு. ஜான் சாமுவேல் ஐயரவர்களுக்கும் திரு. மாசில்லாமணி ஆசிரியர் அவர்களுக்கும் வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கும் கலந்து கொண்ட சாம்பவர் வடகரை சேகர தலைவர் அருள்திரு. ஜெபரத்தினம், சபை மக்கள் ஒவ்வொருவருக்கும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.




CHRISTIAN HISTORICAL SOCIETY
ENGAGE, ENRICH, EMPOWER CHRISTIAN KNOWLEDGE

**ஞாயிறு பள்ளி மாணவ, மாணவிகளை மிஷன் சுற்றுப்பயணம் செல்வதற்கு தொடர்பு கொள்ளவும் 9176780001**



கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: Tinnevelly Christian Historical Society
A/c Number : 1748 020000 3684
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

# அழகு மலர் அன்னம்மாள்

அருண் ஜி,
தென்காசி

அக்காலத்தில் (1862) நல்லூர் சேகரத்தைச் சேர்ந்திருந்தது. மீனாட்சிபுரம் என்ற கிராமச்சபை என்ற சிறிய சபை. ஆனால் உயிருள்ள விசுவாசிகள் பலர் அதிலிருந்தனர், கோயிலூற்று பாஸ்றறரேற்றின் முதல் குரு D. ஞானமுத்து ஐயர் அச்சபை மீது பற்று கொண்டு, அடிக்கடி அதைச் சந்தித்து, உயிரூட்டி ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி வந்தார்.

அச்சபையின் அணிகலன்களிலொன்று அன்னம்மாள். இளவயதினள் கிராமப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு வரை படித்தவள். ஆகையால் அக்கால ரீதியில் அவள் "ஒரு படித்த பெண்" ஒரு உபதேசியாரின் மகளுங்கூட. ஆகையால் 'பெரிய வீட்டுப் பெண்' வயது வந்தபோது அவளை விரும்பிக் கேட்ட 'படித்த இளைஞர்' பலர் இறுதியில் மீனாட்சிபுரம் மாப்பிள்ளையே மகளுக்கேற்றவன் என்று தீர்மானித்த உபதேசியார். அவனுக்கே அவளை மணம் முடித்தார்.

கணவனின் கண்ணுக்கினியாளாக, கருத்தொருமித்த வாழ்க்கையில் கர்த்தரின் கிருபையைக் கண்டார் அன்னம்மாள். 'மீனாட்சிபுரம்' ஆலயத்தில் காலையும் மாலையும் தினம்தோறும் ஆராதனை நடப்பதுண்டு. ஆராதனைகளுக்கு அரை மணிக்கு முன்னேயே ஆஜராகிவிடுவாள் அவள் அக்காலத்தில் ஆராதனைகளில் வழங்கி வந்த லுத்தரன் ஜெர்மானிய தமிழ் பாட்டுகளையும், தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் பாடல்கள், கீர்த்தனைகளையும் தன் இனிய குரலில் பாடுவது அவளுக்கு அதிகப் பிரியம். வீட்டிலும் வேலை ஒழிந்த நேரங்களில் பாடுவாள் அல்லது தன் தகப்பனார் தந்த வேத புத்தகத்தை வாசிப்பாள், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை மாலை ஆராதனைகளுக்கும் ஜெபக் கூட்டங்களுக்கும் தவறாது சென்று வருவாள் நற்கருணைத் திருவிருந்துக்கும் தவறமாட்டாள்.




அன்னம்மாளின் குடும்ப வாழ்க்கைச் சந்தோஷத்தை நிறைவாக்கப் பெண் மகவொன்று பிறந்தது. தொட்டிலிலேயே வேத வசனங்களைக் கற்றுக்கொடுத்துப் பச்சிளம் பருவத்திலிருந்தே அதைப் பக்தியில் வளர்க்கப் பிரயாசப்பட்டாள். அது தன் மழலையில் திருவசனங்களைத் தேனொழுக உச்சரிப்பதைக் கேட்டுக் கேட்டு உளம் பூரித்தாள்.

அவளுள்ளத்தில் ஒரே ஒரு குறை! அவளுடைய கணவன் பக்தியில்லாதவன் ஆராதனைகளை அலச்சியம் செய்பவன் ஆலயப்பற்று இல்லாதவன் ஆண்டவரை நேசியாதவன் ஆனால் அவளை உயிருக்குயிராக நேசித்தான், அவளுடைய பக்தியைப் பாராட்டினான் ஏன், அதில் பெருமைப்படவும் செய்தான் ஆகையினால் அவள் ஆராதனைகளுக்குப் போய்வர எவ்விதத் தடையும் இடையூறும் செய்ததில்லை.

அன்னம்மாளிடம் நமது இந்தியக் கிறிஸ்தவப் பெண்களின், அதிலும் நம் கிராமக் கிறிஸ்தவப் பெண்களின், மிகச் சிறந்த பொக்கிஷமான நாணம் அபரிமிதமாக இருந்தது. யாரிடமும் முகங்கொடுத்துப் பேச வெட்கப்படுவாள். கணவனிடம் கூட மிகுந்த சங்கோஜத்துடன் தான் பேசுவாள். ஆகையினால் அவனிடத்தில் தனக்கிருந்த, அவனது அவபக்தியைக் குறித்த, மனக்குறையைப் பற்றி ஒரு நாளும் அவனிடம் பேசினதில்லை. தன் பக்தி தன் மட்டில். தன் பரிசுத்தம் தன் மட்டில். தன் கிறிஸ்தவ அனுபவத்தையும் அவள் யாரிடமும் பகிர்ந்து கொண்டதில்லை. "இயற்கையாகவே மிகுந்த அமைதியும் அதிக சங்கோஜமுமுள்ளவளாகையால் அவளுடைய ஆவிக்குரிய மன நிலையை அறிந்து கொள்ளுவது மிகவும் கஷ்டமான தாயிருந்தது" என்று ஞானமுத்து ஐயர் எழுதுகிறார் (JI 31-12-1862). மேலும் அவர் சொல்லுகிறார்: 'அவள் (கிறிஸ்தவ அறிவு வளருவதற்குப்) படிக்கவேண்டிய பாடங்களை ஒழுங்காகவும் கருத்துடனும் கற்பதில் சிரத்தையுள்ளவள்' ஆனால், அதுவும் அவளோடு தான் தான். கற்றதைப் பிறருக்குச் சொல்லவும் வெட்கப்படுவாள் இளவயது தானே! முதிர்வயதானால், பிறரையும் தான் அடைந்த சந்தோஷத்துக்கு வழி நடத்தவேண்டுமென்ற ஆவல் அவளைத் தூண்டியிருக்கும்.

எனினும், அவளுடைய பக்தியும் கிறிஸ்தவ அமைதியும் சுத்தமும் பிறரைக் கவராமலிருக்கவில்லை. அவளுடைய அமைதியான கிறிஸ்தவக் குடும்ப ஜீவியம் அவளை ஆட்கொண்ட ஆண்டவருக்குச் சாட்சியாகவே விளங்கிவந்தது. "தெய்வ சந்நிதானத்தில் ஒன்றும் செய்யாமல் நின்றிருந்து, அவருடைய கட்டளைக்குக் காத்திருக்கிற தூதரும் அவரைச் சேவிக்கிறவர்கள் தாம்", என்று மில்டன் என்ற ஆங்கிலக் கவி கூறுகிறது போல அன்னம்மாளும் வெளிப்படையாக கிறிஸ்தவ ஊழியத்தில்

ஈடுபடாவிட்டாலும், தன்னுடைய அமைதியான பரிசுத்த கிறிஸ்தவ வாழ்க்கையின் மூலம் ஆண்டவரைச் சேவித்தாள்.

எதிர்பாராத விதமாக ‘ஆற்றைக் கடக்க’ ஆண்டவரின் அழைப்பு அவளுக்கு வந்தது. ஒரு கொடிய காய்ச்சல். மூன்றே நாள் ! மூச்சொடுங்கும் நேரம் வந்துவிட்டது!

கண்ணீர் சிந்தி நின்ற நேசக் கணவனின் கரம் பற்றினாள். பெலவீன நிலையிலும் மலர்ந்த முகத்துடன் அவன் முகம் நோக்கினாள்... மெலிந்த குரலில் பேசினாள் :

“கண் கலங்காதேயுங்கள்... என் இரட்சகர் இயேசு என் பக்கத்தில் நிற்கிறார். என்னைத் தம்மிடம் அழைக்கிறார். அவரிடம் போவது எனக்கு ரொம்பச் சந்தோஷம்!... அழாதேயுங்கள் ...”

கண்களை மூடினாள் ... அமைதி! கணவனின் ஏக்கம்....

மூடின கண்களைத் திறந்தாள். துக்க முகத்துடன் அவனைப் பார்த்தாள். தான் போகும் இன்ப நாட்டுக்கு அவன் பாத்திரனாயிருக்கவில்லையே... அந்த எண்ணத்தை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவளது கண்கள் கண்ணீர் சொரிந்தன. மிகுந்த ஆவலுடன் அவனைப் பார்த்து, மிகுந்த இரக்கத்துடன் பேசி, “கிறிஸ்து மார்க்கத்தில் உறுதியாக நிலைத்திருப்பீர்களா? ஒழுங்காக ஆராதனைக்குப் போவீர்களா?” என்று கேட்டாள். கண்ணீருடனும், மிகுந்த தாபத்துடனும் அவள் கேட்ட அக்கேள்வி அவனை உலுக்கிவிட்டது. மரண வாசலில் நின்று அவள் கொடுத்த அவ்வேண்டுதல் அவனை வாட்டிவிட்டது. நித்தியத்தில் ஒரு காலை வைத்துக்கொண்டு, அவள் விடுத்த அக் கெஞ்சல் அவனது நெஞ்சை உருக்கிவிட்டது.

“உறுதியாயிருப்பேன், அன்னம், உறுதியாயிருப்பேன்” ஆராதனைகளுக்குத் தவறாது போவேன்,

அன்னம்மா, தவறாது போவேன்.” என்றான் அவன். குனிந்து நின்ற அவனது கண்ணீர் அவளுடைய கன்னங்களில் விழுந்து, அவள் கண்ணீருடன் கலந்தது!

“என்னை நேசிக்கிறாயா? என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?” என்று இரட்சகர் பேதுருவிடம் மூன்று முறை கேட்டார்.

அன்னம்மாளுக்குத் தன் கேள்விக்குக் கணவன் கொடுத்த உறுதிமொழி திருப்தி அளிக்கவில்லையோ? அவள் திரும்பவும் அதே கேள்விகளைக் கேட்டாள். அவன் அதே உத்தரவைச் சொன்னான்.

மூன்றாம் முறை : அதே கேள்வி! அதே மறுமொழி!

நான்காம் முறை : அதே கேள்வி! அதே மறுமொழி!

ஐந்தாம் முறை : அதே கேள்வி! அதே மறுமொழி!

இப்படியே இருபது தடவைகள் அதே கேள்வி, அதே மறுமொழி! ஞானமுத்து ஐயர் எழுதுகிறார். “இப்படியே இருபது தடவைகள் கேட்டு” நிச்சயப்படுத்திக்கொண்டாள்.

கடைசித் தடவை, சத்தமாய் அழுதுகொண்டு கணவன் சொன்னான்: “அன்னம்மா! என்னை நம்பு. உனக்குக் கொடுத்த இந்த வாக்கை உயிருள்ள அளவும் காப்பேன், அன்னம்மா காப்பேன்,” என்றான். அதைக் கேட்ட அப் பரிசுத்தவாட்டியின் முகம் மலர்ந்தது. மலர்ந்து விண்ணில் மணத்தது!.



G Pay

சந்தா அனுப்ப

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

**G-pay (Google Pay) மூலமாக சந்தா நன்கொடை அனுப்ப .....**

‘வரலாற்றுச் சுவடுகள்’ – மாத ஆய்விதழுக்கென்று G-pay(Google Pay) மூலமாக நன்கொடை அனுப்ப விரும்புகிறவர்கள், 91767 80001 என்கிற இந்த எண் மூலமாகவும் அனுப்பலாம். நீங்கள் சந்தா நன்கொடை அனுப்பிய பின்பு, அதைக் குறித்த முழு விபரங்களை இதே எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WhatsApp மூலமாகவோ, அல்லது christianhistorical@gmail.com மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.






Rao Sahib M. Abraham Pandithar,
02-08-1859 to 31-08-1919
Founder of the family of "*Pandians of Thanjavur*"
and "*Karunanidhi Medical Hall*" and author of
"*Karunamirtha Saagaram*"

**பெருமதிப்புக்குரிய தமிழ் அறிஞர் பெருமக்களே,**

தலைவர்களின் வாழ்க்கை வரலாறும், தமிழுக்காக அவர்கள் அளித்த தியாகங்களும் மக்கள் முன்னிலையில் தெரியப்படுத்தி, அவர்களின் வாழ்வில் கிடைத்த உரிமைகளின் வரலாற்றை போற்ற வேண்டும் என்பதற்கு தான். பண்டிதர் அவர்களை பெருமைப் படுத்துவதினால் எதிர்கால தமிழ் சமுதாயமும், இன்றைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ளவும், மாணவ மாணவிகளுக்கு ஒரு முன்மாதிரியாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ராவ் சாகேப் ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் ஆசிரியராக, சித்த மருத்துவராக, கவிஞராக, தமிழிசை ஆய்வாளராக தொண்டாற்றிய ஆபிரகாம் பண்டிதர் தமிழிசை உலகின் நீண்ட இருளைக் கிழித்து வெளிவந்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

அவர் தமிழ் பணியின் மூலம் தமிழும், பிறந்த மண்ணும் பெருமையடையும் என்ற நோக்கத்தில் பண்டிதர் அவர்களின் நினைவு நாளை அரசு விழாவாகவும், பிறந்த ஊரில் மணி மண்டபம் அமைக்கவும், நினைவு நூலகம் அமைக்கவும் ஆபிரகாம் பண்டிதர் தமிழ் வளர்ச்சிக் குழு தமிழக அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் முழுவதும் கொண்டாட திட்டமிட்டுள்ளது. 2023 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பட்டிமன்றம் நடத்தவும், நூல் வெளியிடவும் முயற்சி செய்து வருகின்றோம். அதன் முன்னோட்டமாக இந்த கட்டுரைப்போட்டி நடத்தப்படுகின்றது. தேர்வு செய்யப்படும் கட்டுரை நூலில் வெளியிடப்படும். சிறந்த கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசு உண்டு. பரிசளிப்பு ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்படும். தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**கட்டுரைப்போட்டிக்கான விதிகள்:**

1. கட்டுரைகள் எங்கும் இதுவரை வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.
2. கட்டுரைகள் பக்கங்கள் ஒருங்குறியில் (Unicode) அமைய வேண்டும். கணினியில் தமிழில் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். எழுத்தளவு 12 இருக்க வேண்டும்.
3. தகவல் பக்கங்களை மே 30, 2023 க்குள் நிறைவு செய்து .doc அல்லது .pdf கோப்பு வடிவில் tamilvalarchchikulu@gmail.com அனுப்ப வேண்டும்.
4. தகவல் பக்கங்களில் உள்ள சொற்களின் எண்ணிக்கை A4 தாள் பக்க அளவு, இடம்பெறக்கூடிய கட்டுரைகளுக்கு அளவு 4 முதல் 7 பக்கங்கள்.
5. பரிசு பெறும் கட்டுரைகள் மட்டுமல்லாது, பொருத்தமான கட்டுரைகள் அனைத்தையுமே நூலில் இடம்பெறச் செய்ய உள்ளோம்.
6. தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
7. கட்டுரைகளை மதிப்பீடு செய்வதற்கு அவ்வத்துறைகளில் உரிய கல்வித்தகைமைகளும் அநுபவமும் வாய்ந்த நடுவர்கள் உள்ளனர்.
8. கட்டுரையுடன் கட்டுரை ஆசிரியர்கள் தங்கள் வாழ்க்கை குறிப்பினை 250 சொற்களுக்கு மிகாமல் புகைப்படத்துடன் எழுதி அனுப்ப வேண்டும்.

## வரலாற்றுச் செய்தி




கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தில் சமீபத்தில் வெளியான பேராசிரியர் **தே அ கிறிஸ்துதாஸ்** அவர்கள் எழுதிய ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபையின் முதல் இரத்த சாட்சி தாவீது சுந்தரானந்தன் திருச்சபை வரலாற்றுச் நூலை வரலாற்றுச் சங்க உறுப்பினரும் முதலூர் சேகரத்தின் உறுப்பினருமான திரு அபிஷேக் அவர்கள் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் திரு பீட்டர் அல்போன்ஸ் அவர்களிடம் வழங்கிய பொழுது எடுத்த படம்

## புத்தக அறிமுகம்

1911 ம் ஆண்டு தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் நடந்த கன்வென்ஷன் கூட்டங்களில் அருள்திரு. சா. பரமானந்தம் ஐயா அவர்கள் ஆற்றிய பிரசங்கங்களின் தொகுப்பான **சுவிசேஷ பிரசங்கங்கள்** என்ற 200 நூல்களை தூத்துக்குடி திரு. ஜெபகனி ஐயா அவர்கள் & தேனி ஜேசுதாசன் ஐயா அவர்கள் மூலமாகவும் நம்முடைய திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்திற்கு நூல்கள் வழங்கப்பட்டது. அதனை நம்முடைய நெல்லை திருமண்டல பேராயர் பேரருள்திரு. ARGST பர்னபாஸ் ஐயா அவர்கள் ஜெபித்து அந்த புத்தகத்தை வெளியிட்டார்கள். உடன் சாம்பவர் வடகரை சேகர குரு ஜெபரத்தினம் ஐயா மற்றும் பேராயர் சாப்ளின் அவர்கள் உடன் இருந்தார்கள். அவர்களுக்கும் வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.






**பிரதிகளுக்கு**

**+91 94420 64626**

**+91 94420 51578**

தமிழ் நாட்டின் தனிப்பெரும் நாவலாசிரியர்

அ.மாதவையா அவர்களின்

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்

## தொடர்– 25



விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணைக் குற்றஞ் சாட்டியவர்களிடம் நமது ஏசுநாதர் உங்களில் குற்றம் இல்லாதவன் முதலில் இவள் பேரில் கல்லெறியட்டும் என்று சொல்லவில்லையா?' என்றார் லிட்டில்டன்.

'சாத்தான் கூடத்தான் அவசியமானால் வேதத்திலிருந்து மேற்கோள் காட்டிவிடுவான். உமது தற்காப்பு முயற்சி எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. குற்றத்தை உமது பேரில் மாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறீரே அந்த நாணயத்தையும் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் கிறிஸ்தவர், கனவான் என்று சொல்லிக்கொள்கிற உம்மைவிட இந்த இந்துப் பெண்மணி மானமுடையவள் என்பதை நினைக்கும்போதுதான் வேதனையாக இருக்கிறது. உமது வெறியை அடக்க முடியாமல் இந்தப் பெண்ணை ஏமாற்றி இவள் மானத்தை அழித்துவிட்டீர். நீர் கிறிஸ்தவக் கொள்கைகளை இவளுக்குக் கற்றுக் கொடுத்து ஞானஸ்நானம் பெறும்படி அழைத்துக்கொண்டு வந்திருப்பது வியப்பாக இருக்கிறது. உமது ஒழுக்க நியதி வக்கிரமானது. கிறிஸ்தவக் கடமையுணர்ச்சியும் மரத்துப் போய்விட்டது என்றே நினைக்கிறேன். இத்தனை நாளும் இவளை ஏமாற்றிப் பாவம் செய்யத் தூண்டியது போதும். இனிமேலாவது அவள் பாவம் செய்யாமல் வாழ்ந்துவிட்டுப் போகட்டும். இவள் மனத்தாழ்மையுடன் தன் பாவத்தை உணர்ந்து மனம் வருந்தி இரட்சகரை நம்பி நல்ல வாழ்க்கை நடத்திவந்தாளானால் இன்னும் சில காலம் கழித்து நான் சபையில் சேர்த்துக் கொள்வேன்.

'உனக்கு நான் சொல்லுவது இதுதான். நான் மேற்கோள் காட்டிய வேத வசனத்தை நினைவில் வைத்துக்கொள். உன் ஆத்மாவுக்கு ஈடாக அனைத்துலகத்தையும் பெறினும் அது இலாபமாகாது. பூமியில் மனிதனாகப் பிறந்துவிட்ட யாவருமே பாவம் செய்யக்கூடியவர்கள்தான். இருப்பினும் பாவ ஸ்திரீக்குத் தீர்ப்புக்கூறிய நமது ஆண்டவர் என்ன சொல்லி அனுப்பினார் தெரியுமா? நானும் உன்னைக் குற்றப்படுத்துவதில்லை, போ, இனி பாவம் செய்யாதே என்று சொன்னார். இன்னும் காலம் இருக்கும்போதே மனம் திரும்பி மன்னிப்புக் கேட்டுக்கொள். 'உம்மிடம் எனக்கு அனுதாபம் இல்லை என்று நினைத்துக் கொள்ளவேண்டாம். இந்தத் தொடர்பு ஏற்படும் முன் நீர் தெய்வபக்தியுடன் அப்பழுக்கற்று வாழ்ந்து வந்தீர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

'உமது பிரச்சினை கடுமையானதுதான். நீர் நல்லெண்ணத்துடன்தான் நடந்துகொண்டிருக்கிறீர். பொதுவாக நமது அதிகாரிகள் தொடர்புகொள்ளும் கீழ்த்தரமான பெண்ணல்ல இவள் என்பதையும் நான் அறிவேன். ஆனால் ஆயிரம்தான் சொன்னாலும் நீர் இவளை ஏமாற்றிச் செய்துகொண்ட போலிச் சடங்கு, திருமணம் ஆகிவிடாது. அதை நினைக்கையில் தான் உமது குற்றம் மன்னிப்பு அளிக்கவே முடியாததாகத் தோன்றுகிறது. போய் மனந்திரும்பும். இனிப் பாவம் செய்யாதீர், கடவுள் உங்களை மன்னிப்பாராக!' என்று சுவார்ட்ஸ் மொழிந்தார்.

லிட்டில்டன் எழுந்திருந்தார். முகம் வெளுத்திருந்தது. கைகள் நடுங்கின. இரண்டு அடிகள் நடந்தவர், நின்று, கிளாரிந்தாவிடம் திரும்பி மெல்லிய குரலில் 'கிளாரிந்தா, வா நாம் போகலாம்' என்றார்.

அதைக் கவனித்த சுவார்ட்ஸ் இடி முழக்கம்போன்ற குரலில் 'அவளைப் பாவத்தில் விழவைக்கவேண்டாம். நீரும் பாவத்தில் விழவேண்டாம். நடந்துகொண்டால் இனிமேல் அப்படி உமது உடலும் ஆத்மாவும் முடிவில்லா நரக வேதனையை அனுபவிக்கும். இவளை விட்டுவிட்டு நீர் போகலாம். நான் புத்திமதியும் சொல்லவேண்டியது இவளுக்கு ஆறுதலும் அவசியமாகிறது. இவள் ஆத்மா வேதனையில் அழுந்துவதையும், அழக்கூட முடியாதபடி துக்கத்தால் நிரம்பி இருப்பதையும் நீர் கவனிக்கவில்லையா? சில காலமாவது இவளை விட்டுவையும், இனி பாவம் செய்யாதீர்' என்றார்.

வண்டியை கிளாவிருந்தாவுக்காக விட்டுவிட்டு லிட்டில்டன் இயந்திரம்போல் நடந்து பங்களாவை அடைந்தார்.

**மாசற்ற முத்து**

மனிதனின் சுகதுக்கத்தை சிறிதும் சட்டைசெய்யாமல் இயற்கை தன்பாட்டில் இயங்கிக்கொண்டு போவதைக் கவனிக்கும்போதுதான் இந்தப் பிரபஞ்சத்தின் கச்சித அமைப்பில் மனிதனுக்கு ஒதுக்கப்பட்ட இடம் எத்தனை அற்பமானது என்பது புரியும். ஆசைகள், கனவுகள், சிந்தனைகள் தனித் தனியே கொண்ட மனிதச் சரக்கை ஏற்றிச் செல்லும் பிரமாண்டமான எஃகுக் கப்பல் ஆழ்கடலில் ஆழ்ந்து போகிறது. சுரங்கம் வெடித்து நூற்றுக்கணக்கான உழைப்பாளிகள் ஒரு நொடியில் சாம்பலாகிப்

புதைந்து போகின்றனர். பஞ்சமோ, கொள்ளைநோயோ உண்டாகி இலட்சக் கணக்கான மக்கள் வேதனையில் துடித்து கதியில்லாமல் மாண்டுபோகிறார்கள் அல்லது பூமாதேவி தன் வாயைத் திறந்து பல நகரங்களையும் ஊர்களையும் ஒருங்கே விழுங்கித் தன் வயிற்றுக்குள் அடக்கிக்கொண்டு விடுகிறாள். இருந்தும் சூரியன் ஜோதியாய்ப் பிரகாசிக்கிறது. சந்திரனும் நட்சத்திரங்களும் வானத்தில் பவனி வருகின்றன. பறவைகள் பாடுகின்றன. மரங்கள் கோலாகலமாகப் பூத்துச் சொரிகின்றன. இயற்கை உயிர்த் துடிப்புடன் மகிழ்ச்சியாக இயங்கிக்கொண்டு தான் வருகிறது.

இயற்கையின் இந்த அசட்டையை உணர்ந்தவளாய், கிளாரிந்தா ஒரே ஓர் எண்ணெய் விளக்கால் வெளிச்சமூட்டப்பட்ட ஒரு சிறிய இருட்டு அறையில் உள்ளத்தின் கலக்கத்தையும், உடல் வலியையும் தாங்கமுடியாமல் தாங்கிக்கொண்டு ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தாள். அவள் விரும்பி ரசிக்கும் நிலவும், வெள்ளிகளும் அவள் நிலையைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தம்பாட்டில் ஒளிமயமாய்த் திகழ்ந்து கொண்டிருந்ததை சிறிது திறந்திருந்த கதவின் வழியே கண்டாள். ஜாஜ்வல்யமான அவள் ஆசைக் கனவுக் குமிழி வெடித்து, அவள் காதல் அகல்விளக்கு நீர்ப்பெருக்கில் மூழ்கி, விரக்தியுடனும் வெறுப்புடனும் அவள் தனியே தத்தளிக்கத் தொடங்கி நான்கு நாட்கள் ஆகியிருந்தன.

அன்று அவள் சுவார்ட்ஸிடம் விடைபெற்றபின் லிட்டில்டன் பங்களாவுக்குத் திரும்பாமல், வண்டியை அனுப்பிவிட்டு, தன்னையும் தன் அவமானத்தையும் மறைத்துக்கொள்ளும் எண்ணத்தில் சாரதாவுக்குச் சொந்தமான ஒரு சிறு குடிசைக்கு அவளுடன் வந்து சேர்ந்தாள். அவள் ஆசையுடன் நெஞ்சில் ஏற்றி வைத்த தங்க விக்கிரகத்தின் பாதங்கள் வெறும் களிமண்ணால் ஆனவை என்று இரண்டாம் தடவையாக குரூரமாக அம்பலமாகிவிட்டது. இந்த அதிர்ச்சியில் அவளுக்குக் குறைப்பிரசவமும் ஏற்பட்டுவிட்டது. இதனால் இந்தப் பாழும் வாழ்க்கையின் குரூரப்பிடியிலிருந்து ஒருவேளை விடுதலை கிடைத்துவிடலாம் என்று எதிர்பார்த்தாள். ஆனால் சாரதாவின் கவனமான பணிவிடையாலும் திறமையான வைத்தியத்தாலும் அந்த நம்பிக்கையும் போய்விட்டது.

அழுதழுது கண்கள் வீங்கிப்போயிருந்தன. கலங்கிய மனத்தில் ஆயிரக்கணக்கான சிந்தனைகளும் குறுக்கும் நெடுக்குமாக ஓட, அவள் குளுமையை உணர்ச்சிகளும் கண்கள் நிலவின் குறைந்த பட்சம் வெறித்துப் பார்த்தன. லிட்டில்டனுக்கு வில்லங்கம் நீங்கி விடுதலை கிடைத்து அவர் அவளை முறைப்படி மணந்துகொள்ளும் வரையிலாவது, அவரிடம் திரும்பிச் செல்வதில்லை என்று சுவார்ட்ஸுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தாள்.

அப்படியானால் அவர் சொன்னது அவள் சந்தேகித்தபடி அவருடைய சுய கதைதானா? ஆனால் அவர் மழுப்பி ஏமாற்றி வீரதீரமாக விட்டார். அவளும் அவரை நம்பிவிட்டாள். அவளைக் காப்பாற்றி பின் அரவணைத்துப் பாதுகாத்த அவரை இப்பொழுது எப்படி நம்பாமல் இருக்கமுடியும்? அவரை நன்றாகப் புரிந்துகொண்டதால், அவர் அன்பின் ஆழமே அவரை அப்படி ஓர் அற்ப ஏமாற்றுவேலைக்குத் துணிய வைத்தது என்ற முடிவுக்கு வந்தாள். குரு கண்டனம் செய்ததும், எத்தனை பணிவுடன் மனமுடைந்தவராக. அறையைவிட்டு வெளியே சென்றார்! அவர் கதி இனி என்ன ஆகும்? தன் கதிதான் என்ன?

அவள் சாவுக்கு அஞ்சவில்லை. எதிர்பார்த்தபடி இப்பொழுது சாகாமல் பிழைத்துக்கொண்டாலும், அவசியம் ஏற்பட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் விஷம் அல்லது வேறு உபாயத்தால் உயிரை மாய்த்துக்கொள்ளலாம் என்ற துணிவு இருந்தது. கடவுள் அத்தகைய மரணத்தைக் கண்டனம் செய்திருப்பது உண்மைதான். ஆனால் தன் போன்ற அபாக்கியவதிகளின் துன்பங்கள் தாளமுடியாமல் இருப்பதினால், கடவுள் அப்படியொரு செயலுக்குக் கருணையுடன் தீர்ப்பளிப்பார் என்று நினைத்தாள்.

அவர்? அவர் கதையின் பரிதாப நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாய் நினைவுபடுத்திப் பார்த்தாள். சராசரி மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களைவிட அவர் பங்குக்கு விழுந்த துன்பங்கள் அதிக மானவையே என்று ஒப்புக்கொண்டாள்.

இப்பொழுது குற்றம் புரிந்தவர் அவர். நாணயமான நடத்தையுடைய அவர், குற்றம் வெளிப்பட்டுவிட்டதை உணர்ந்து வேதனையால் எப்படி மருகுவார் என்பதையும் நினைத்துப்பார்த்தாள். அவள் குடும்ப வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் இப்பொழுதுதான் அவளுக்கு விளங்கின. அவர் இவ்வளவு நாளும் குற்றத்தை மனதுக்குள் வைத்து மருகிக்கொண்டிருந்தார் என்பது இப்பொழுதுதான் அவளுக்கு விளங்கிற்று. எல்லாம் அவளுக்காகத்தானே!

பெண் ஆணின் துர்தேவதை என்று ஞானியான பாட்டனார் சொல்லியிருந்தது உண்மைதான் போலும். அன்று மாதவராவ் தன்னை மறந்து அப்படி வெறியனைப்போல நடந்து கொண்டதற்கும்' தான்தான் காரணம். இப்பொழுதும் தன் உயிரையும் பொருட்படுத்தாது தன்னைக் காப்பாற்றிய இந்தக் கிறிஸ்தவரை-நேர்மையும் பக்தியும் உடைய ஒரு மனிதரைக் கெடுத்து அவருக்கு அவப்பேர் உண்டாக்கியதற்கும் தான் தான் காரணம். பாதிரியார் தன்னை மன்னித்து அவரைக் குற்றம் சாட்டினாலும் குற்றவாளி தானேதான். உயிரைப் போக்கிக் கொள்வதுதான் இந்தக் குற்றத்திற்குப் பிராயச்சித்தமாகும். சில சமயங்களில் இந்த உண்மையை ஏன்தான் அறிந்தேனோ, ஞானஸ்நானத்தை ஏன்தான் விரும்பினேனோ. அதனால் அல்லவா இந்தத் துன்பம் நேர்ந்துவிட்டது என்றுகூட நினைத்து அங்கலாய்த்தாள்.

ஆனால் சில சமயங்களில் சிந்தனை ஓட்டம் வேறு திசையில் சென்றது. அவர் தன்னை ஏமாற்றிக் கெடுத்துவிட்டார் என்ற எண்ணம் ஏற்பட்டு அவர்மீது வெறுப்பைத் தூவியது.

ஒருவேளை அவர் ஆஷாடபூதிதானோ? படிப்பது வேதம், இடிப்பது பெருமாள் கோயில் என்ற கணக்கில் நடந்துகொள்பவரோ? உண்மையைச் சொன்னால் நான் ஒருநாளும் இணங்க மாட்டேன் என்று அறிந்திருந்ததால் அந்த முஸ்லிம் நண்பரின் உதவியோடு என்னை வேண்டுமென்றே வஞ்சித்துவிட்டார். எத்தனை பெரிய முட்டாளாக இருந்திருக்கிறேன். உலக அறிவு கொண்ட மற்றப் பெண்கள் இதை உடனே கண்டுபிடித்திருப்பார்களே. காதல் என் கண்களை மூடி இருந்ததால் அவர் வைத்த அந்தச் சாதாரணப் பொறியிலேயே விழுந்திருக்கிறேன். தூர நாட்டில் தனிமையைத் தாங்க முடியாத அந்த அந்நியர், தன்

பசியைத் தீர்த்துக்கொள்ள என்னைப் பயன்படுத்திக்கொண்டார். அவருக்கு என்ன அன்பா என்னிடம்? அவர் கதையே என்னை ஏமாற்றுவதற்காக ஜோடிக்கப்பட்ட பொய்க் கதையோ என்னவோ? இவராக வெளியிட்டிருந்த தகவல்களைத் தவிர பாதிரியாருக்கு இவரைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. ஆம்; இப்பொழுது எல்லாம் விளங்குகின்றது. அதனால்தான் இப்பொழுது அவர் என்னைத் தேடிவரவில்லை. அந்நியப் பெண்ணை ஏமாற்றிக் கெடுத்ததைவிட, ஒரு சக ஐரோப்பியருக்குத் தன் வண்டவாளம் வெளிப்பட்டுவிட்டதே என்பதுதான் அவர் மனத்தை அதிகமாக உறுத்துகின்றது. அந்த ஐரோப்பிய மிஷனெரியைப் பகைத்துக்கொள்ள விரும்பாமல் என்னை அப்படியே ஒதுக்கி விலக்கிவிட்டார். அவர் உண்மையிலேயே சீலரானால், என்னை மிகவும் நேசித்ததினால் மட்டுமே என்னை ஏமாற்றியிருந்தாரானால், பாவத்தையும் அவமானத்தையும் பொருட்படுத்தாமல் எனக்கு வாழ்வளிக்கக்கருதியிருந்தாரானால், இப்பொழுது கொள்கையைப் பிரதானமாகக் கொண்ட ஒரு குருவின் கட்டளைக்குப் பணிந்து என்னை ஒதுக்கி இருப்பாரா? நான்கு நாட்களாகியும் இன்னும் வரவில்லை. அவர் எனக்கு. இழைத்துவிட்ட பெரிய தீங்குக்கு மன்னிப்புக் கேட்கக்கூட வரவில்லை. ஒரு பெண்ணுக்கு அவளுடைய நற்பெயரைவிட விலையுயர்ந்த பொருள் வேறு என்ன இருக்கிறது? இவர் வெறியைத் தணிக்க என்னைப் பயன்படுத்தி, என்னை ஏமாற்றி, என் நற்பெயரைக் கெடுத்துவிட்டு, அதற்கு மன்னிப்புக் கேட்கவாவது வந்திருக்கலாம். இதற்காகவா மாதவனின் கோரிக்கையை மறுத்து அவனை விரட்டி அனுப்பினேன்? அவன் விருப்பப்படி நடந்திருந்தால் என் சொந்த மனிதர் இதை விடக் குறைவாகவே என்னைக் கண்டனம் செய்திருப்பர்.

மேலும் ராஜரிஷிபோல் வாழ்ந்த என் பாட்டனாரின் பூத உடல் இருந்த இடத்தைக் கறைப்படுத்தவும் அவர் தயங்க வில்லையே. சாவைத் தவிர இனி எனக்கு என்ன வழி இருக்கிறது. எளியோரை வலியோர் வாட்டுகின்ற இந்தப் பூமியில் நிம்மதி இல்லை. சாவு ஒன்றுதான் விடுதலை தரும். தற்கொலையினால் என் துன்பங்களுக்கெல்லாம் முடிவு கட்டினால்தான் ஒருவேளை என்னை நாசமாக்கிய அவருக்கு மனவிரக்கம் உண்டாகலாம்.

எண்ண ஓட்டம் எந்தத் திசையில் சென்றாலும் அது கடைசியில் உயிரை மாய்த்துக்கொள்ளும் கட்டத்தில்தான் வந்து நின்றது. இந்தச் சிந்தனைகள், அவள் கட்டில் கால்மாட்டில் பாயில் படுத்திருந்த சிறுவன் வீறிட்டு அலறியதால் கலைந்தன. அவனைச் சாந்தப்படுத்த 'என்ன கோபால், என்னப்பா நடந்தது? பயந்துவிட்டாயா? கிட்டே வா, ஏதாவது கடித்து விட்டதா?' என்று ஆதரவாகக் கேட்டாள்.

பையன் எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டு, 'ஒரு சொப்பனம் கண்டேன். ஒரு ஆள் ஒரு பெரிய கத்தியை வச்சுக்கிட்டு வந்து ஒங்களையும் எங்கம்மாவையும் குத்தவந்தான். பயமா இருக்கு. எங்கம்மா எங்கே?'

'அம்மா, மருந்து வாங்கிவர உங்க மாமா வீட்டுக்குப் போயிருக்கா. இப்ப வந்துடுவா, நீ என் கட்டிலில் என்கிட்ட வந்து உக்காந்துக்கோ. பயமெல்லாம் போயிடும்' என்றாள்.

பையன் அப்படியே வந்தான். அவனை அணைத்துக் கொண்டதும் அவனும் அவளை ஒட்டிக்கொண்டான். அவனுக்கு நாலைந்து வயது இருக்கும். கெட்டிக்காரப் பையன். சாரதாவின் மணவாழ்க்கையின் ஒரே சின்னம் அவன். இந்தப் பையன் பிறந்த சில மாதங்களுக்கெல்லாம் அவளுடைய சிப்பாய்க் கணவன் சண்டையில் இறந்துவிட்டான்.

சாரதாவின் சகோதரன் ஒரு பழ வியாபாரி. தொழில் செழிப்பாக நடந்ததால், தன் பையனும் சகோதரனின் பிள்ளைகளுடன் வளர்ந்து ஏதாவது தொழில் படிக்கட்டும் என்று சாரதா அவனை அங்கு விட்டுவைத்திருந்தாள். இந்தக் குடிசை அவளுடைய கணவனுடையது. இப்பொழுது அவள் சகோதரன் சாமான்கள் போட்டு வைப்பதற்கு அதைப் பயன்படுத்தி வந்தான். கிளாரிந்தாவுக்காக அதை அவசரமாகக் காலிபண்ணி சுத்தம் செய்து கொடுத்திருந்தான். பையனும் இப்போது அம்மாவுடன் ஒட்டிக்கொண்டான். கிளாரிந்தாவை அவன் மாமி என்று அழைத்தான். அவனுடைய மழலைப் பேச்சுக்கள் கிளாரிந்தாவின் கவலையை ஆற்றிவந்தன.

சற்று நேரம் கழித்து சிறுவன் மீண்டும் தன் தாய் கத்தியால் குத்தப்படவில்லை என்பதை உறுதி செய்ய விரும்புவன்போல 'எங்கம்மா எங்க? எப்ப வருவா?' என்று நச்சரிக்க ஆரம்பித்தான். அதற்குள் சாரதாவும் மருந்துக் கிண்ணத்துடன் வந்து சேர்ந்தாள்.

'உன் பையன் உன்னைத் தேடுகிறான். யாரோ நம் இருவரையும் கத்தியால் குத்த வந்ததாகச் சொப்பனம் கண்டானாம். உன்னைப் பார்க்கிறவரையில் அவனுக்கு நம்பிக்கையே ஏற்படவில்லை. நான் தூங்கும்போது நிஜமாகவே என்னை யாராவது கத்தியால் கொன்றுபோட்டுவிட்டால் இந்த வேதனைக்கு ஒரு முடிவாவது வரும்!' என்றாள்.

சாரதா பரிவு நிறைந்த குரலில், 'பாயீமா அப்படிப் பேசாதேமா. எத்தனையோ துன்பம் அநுபவிச்சாச்சு, உண்மை தான். ஆனா இப்ப ஒரு வழியா தொந்தரவில்லாமத்தானே கஷ்டமும் இல்லை. இந்தா இருக்கோம். இனிமே ஒரு குழந்தைகூட எனக்குப் பெரிசில்லை. நீ சுகமா சந்தோஷமா இருந்தா அதுவே எனக்குப் போதும். நான் உயிரோடு இருக்கும் வரைக்கும் நீ சாவைப்பத்திப் பேசக்கூடாது. நம்ம பாட்டுக்கு கடவுளேன்னு இங்கேயே இருந்துடலாம். வேணும்னா இதைவிடப் பெரிய வீடாப் பார்த்து இருந்துட்டுப் போறது. அந்த மானங்கெட்ட பரங்கிப்பய ஏமாத்துக் காரங்கிட்ட இனிமே போகப்படாது. பாவி, என்னமா ஏமாத்திப் போட்டான்.'

மனிதனுடைய மற்ற உடைமைகளைப் போலவே அவன் நற்பெயரும் நிரந்தரமானது அல்ல. போன வாரம் வரை, நல்ல எசமானர் அல்லது பரங்கி உத்தமரு என்று குறிப்பிட்டு வந்த சாரதா இப்பொழுது அவரை வேறு பதங்களால் குறிப்பிடத் தொடங்கியிருந்தாள். உண்மை வேடிக்கையான குணம் உண்டு. அன்புக்குரியவரைப் பிறர் அன்புக்கு நியாயமாகவே பழித்துச் சொன்னாலும் அதைக் கேட்கச் சகிக்காது. புகழவோ பழிக்கவோ உரிமை தனக்குத்தான் உண்டு என்று நினைக்கும்.

கிளாரிந்தா கோபமாக 'அவரை அப்படிச் சொல்லாதே என்று எத்தனை தடவை சொல்லுவது சாரதா? அந்தமாதிரி ஏமாற்றுவது அவர் சுபாவத்திலே இல்லை. நான்தான் அவரை அப்படிச் செய்யத் தூண்டினேன். நானும்தான் குற்றவாளி. என் காதுகேட்க இனிமேல்

இப்படி அநியாயமாக அவரைப் பற்றிப் பேசினாயானால் எனக்கு ரொம்பக் கோபம் வரும். கடவுளுக்குத் தெரியும், என்னாலேதான் அவருக்குத் துன்பம். அவருடைய பெருந்தன்மையான பாதிரியாரிடம், குற்றம் எல்லாம் தன்னுடையதுதான் என்று குணத்தினாலே, அவர் சொல்லிக்கொண்டார். எப்பொழுதுமே அவர் பெருந்தன்மையானவர் தான் யாருக்குத் தெரியும்? எப்படி இருக்கிறாரோ? யார் வந்து சொல்லுவார்கள்?' என்றாள் ஏக்கத்துடன்

'ஏன். அவர் பட்லர் ராமப்பா இருக்கானே. அவன் எங்கண்ணன் வீட்டுக்கு வந்து இப்பத்தான் நம்மைப்பத்தி விசாரிச்சான். அவனுக்குத் தெரியப்படாதுன்னு நான் பின் வாசல் வழியா வந்தேன். ஆனா நான் உன்னிடம் வர்ற வரையில் அவனை அங்கே நிறுத்திவைக்கச் சொல்லி அண்ணங்கிட்டே சொன்னேன். எசமானருக்கு ரொம்ப சுகமில்லாததுனாலே உன்னைப் பார்க்கணும்னு சொன்னாராம். இந்த மூணுநாளும் நம்மைத் தேடி பட்டணம் பூராச் சுத்தியிருக்காங்களாம். அண்ணங்கிட்ட ராமப்பா சொன்னதைக் கேட்டேன்' என்றாள் சாரதா.

ஏதோ ஓர் இன்ப உணர்ச்சி கிளாரிந்தாவினுள்ளே பரவியது. நெஞ்சு படபடவென்று அடித்தது. கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்து பரபரப்புடன் 'அவனை உடனே இங்கே அழைத்துக்கொண்டு வா' என்றாள்.

'நான் இப்பவேபோய்க் கூட்டியாறேன். ஆனால் நீ ஒண்ணும் அதுக்காக எழுந்து அலட்டிக்காதே' என்று சொல்லி தன் எஜமானியை வலுக்கட்டாயமாகப் படுக்கவைத்தாள். 'நான் வரதுக்குள்ளே இந்தக் கஷாயத்தைக் குடிச்சிரு' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டாள். சாரதா சில நிமிடங்களில் பட்லர் ராமப்பாவைக் கையோடு கூட்டிவந்தாள்.

**என்னை மன்னிப்பாயா?**

ராமப்பா வந்து நடந்தவற்றைச் சொன்னான். அன்று பாதிரியாரைப் பார்த்தபின் லிட்டில்டன் கவலை தோய்ந்த முகத்துடன் நடந்தே வந்து சேர்ந்தார். தன் அறைக்குச் சென்று மதுவைச் சற்று அதிகமாகவே குடித்தார். வராந்தாவில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டே கோச்சு வண்டியை எதிர்பார்த்து, அது வராததினால் பொறுமையிழந்தார். பின் வண்டி வெறுமையாக வந்தது. எஜமானி அம்மா பணிப்பெண்ணுடன் நடந்து நகரத்துக்குள் எங்கேயோ போய்விட்டதாக சாரதி சொன்னான். அவன் அவர்களைத் தொடர்ந்துபோய்க் கூட்டிக்கொண்டு வராமல், காலி வண்டியுடன் ஏன் திரும்பிவந்தான் என்று கேட்டு கடுங்கோபத்தில் அவனைச் சாட்டையால் அடித்துவிட்டார். தன்னை யாரும் வந்து தொந்தரவு செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டு மீண்டும் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டார். அன்று நிறையக் குடித்தார். ராமப்பா அவருடன் பழகிய பத்து வருஷத்தில் அவரை இந்தவித மனநிலையில் ஒரு நாளும் கண்டதில்லை. ஆகையால், சந்தேகம் கொண்டு அறைக்கு வெளியில் காத்திருந்தான். அவர் எழுதிக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. பின் சில நிமிடங்கள் கழித்து வெடிச் சத்தம் கேட்கவே, அவன் கதவை அடித்துத் தள்ளிக்கொண்டு போய்ப் பார்த்ததில் எஜமான் தற்கொலை முயற்சி செய்திருப்பதைக் கண்டான். குடித்திருந்ததாலோ அல்லது வேறு எக்காரணத்தினாலோ குண்டு தவறி அவரது வலது காதைத் தாக்கியிருந்தது. ராமப்பா துப்பாக்கியை அகற்றிவிட்டு மற்ற வேலையாட்களின் உதவியோடு அவரைப் படுக்கையில் கிடத்தினான். அவர் இன்னும் மது கேட்டார். அவரை அமைதியாகப் படுக்கச் செய்வதற்காக அவர்கள் அதைக் கொடுக்கவேண்டியதாயிற்று. உணவை மறுத்து விட்டார்.

எஜமானி திரும்பி வந்துவிட்டாளா? என்று அடிக்கடிக் கேட்டார். மறுநாள் காலையில் கண் விழித்ததும் இடதுகால் பெருவிரல் மிகவும் வலிக்கிறது என்று சொன்னார். அதற்குள் குளிரும் காய்ச்சலும் சேர்ந்துகொண்டது. பெருவிரல் வலியும் தீவிரமாகி, வேதனை தாங்கமாட்டாதவராய்த் துடித்தார். மறுநாள் உடலின் வேறு சில பாகங்களும் சூலை நோயால் தாக்கப்பட்டு வீங்கிவிட்டன. படுக்கையை விட்டு அசைய முடியவில்லை. வலி மிகுதியால் ஆத்திரங் கொண்டார். காய்ச்சலின்போதும் எஜமானியைப்பற்றி அடிக்கடி விசாரித்தார். வரவர மணிக்கு ஒரு தடவை கேட்கத் தொடங்கினார். ராமப்பா, தான் மாத்திரம் படுக்கை அருகில் இருந்துகொண்டு மற்ற வேலையாட்களை அழைத்து எஜமானியைத் தேடிக் கொணரும்படி அனுப்பினான். ஆனால் எஜமானியை அவர்கள் கண்டுபிடிக்காமலே திரும்பிவந்தனர். அவர் நிலைமை மோசமாகிக்கொண்டு வரவே, அவர் நினைந்துருகும் எஜமானியை எப்படியாவது கூட்டிவரவேண்டும் என்ற எண்ணத்தில் தானே புறப்பட்டதாகவும் சொன்னான். அவள் அவரை உயிருடன் காணவேண்டுமானால், அவள் அந்த வினாடியே தன்னுடன் கிளம்பினால்தான் முடியும் என்று சொல்லி முடித்தான். 'உங்க எசமானர் செஞ்ச வேலையினாலே அவளுந்தான் படுக்கையில் விழுந்துட்டா. செத்துத்தான் பெழச்சிருக்கா. இப்போ வந்தா அவா ஒடம்பு என்னத்துக்கு ஆகும்?' என்றாள், சாரதா சற்றுக் கோபமாக.

'நான் உடனே போகணும் சாரதா. ராமப்பா சொன்னது தான் சரி' என்றாள் கிளாரிந்தா தீர்மானமான குரலில். மனதிலிருந்த வேதனையும் பரபரப்பும் குரலில் தோன்றா வண்ணம் மறைத்துக்கொண்டு:

'என் உடம்பு இப்பொழுது எவ்வளவோ தேவலை. நடந்துகூட வந்துவிடுவேன். இங்கிருந்து நமது வீடு எவ்வளவு தூரம் ராமப்பா?' என்று கேட்டாள். பட்லர், 'ரெண்டு கூப்பிடு தூரம் இருக்கும் அம்மா. ஆனால் நீங்க பலவீனமாக இருக்கீங்கன்னா நான் போய் வண்டியை எடுத்துக்கிட்டு நொடிப்பொழுதில் வந்துடறேன்' என்றான். 'வேண்டாம், நேரமாகிவிடும். நான் நடந்தே வந்து விடுகிறேன்' என்று சொல்லிக் கட்டிலில் இருந்து எழுந்தாள்.

'சும்மா இருக்கமாட்டே? இந்தத் தெரு தாண்டறதுக் குள்ளே உயிர் போயிடும் உனக்கு' என்று சாரதா சொல்லி:

'உனக்கே நியாயமா இருக்கா, சொல்லு என் கண்ணல்ல, சித்த நாழி உட்கார்ந்திரு. நான் போய் எங்க அண்ணனுடைய மாட்டு வண்டியைக் கொண்டாறச் சொல்றேன்' என்றாள். கிளாரிந்தா ஒப்புக்கொண்டாள்.

அவர்கள் பங்களாவை வந்து சேரும்போது இரவு மணி பதினொன்று.....

**தொடரும் ...**



# குருத்தோலை ஞாயிறும் கோவேறு கழுதையும்

முனைவர் ஜான்சி பால்ராஜ், ஆசிரியர் , திருநெல்வேலி

கிறிஸ்தவத்தில் ஈஸ்டர் பண்டிகைக்கு முந்தின ஞாயிற்றுக் கிழமையை குருத்தோலை ஞாயிறு என்று விசேஷமான நாளாக ஆசரிக்கின்றனர். அது என்ன குருத்தோலை ஞாயிறு? இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலும் கிராமப்புறங்களில் கிறிஸ்தவ தேவாலயங்களில் இருந்து கையில் சிலுவை வடிவில் பனை அல்லது தென்னை ஓலைகளை வைத்து அசைத்தபடி பாடல்கள் பாடிக் கொண்டு தெருக்களில் பவனியாக (ஊர்வலமாக) செல்வர். கிறிஸ்தவ சபை அமைந்திருக்கும் ஊரின் எல்லாத் தெருக்களுக்குள்ளும் சென்று கடைசியாக ஆலயத்தையும் சுற்றி வந்து ஆலயத்திற்குள் செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் வைத்து அந்த நாளைச் (குருத்தோலை ஞாயிறு) சார்ந்து விவிலியத்திலுள்ள விசயங்களைப் பற்றின செய்திகள் பிரங்கிக்கப்படுகிறது. மக்கள் ஊர்வலமாகச் செல்வதால் குருத்தோலை ஞாயிறு என்ற அந்த நாள் சமயத்தைக் கடந்து அனைவரது கவனத்தையும் ஈர்க்கிறது.

இந்தக் குருத்தோலை ஞாயிறு வசந்த காலமான கோடையின் தொடக்கக் காலமாக (ஏப்ரல்) இருப்பதால் காலையிலிருந்தே வெயில் அதிகமாக இருக்கும். எனவே பெரிய ஊர்களில் பவனியாக மக்கள் செல்லும்போது ஆங்காங்கே குளிர்பானங்கள் அளிக்கப்படுமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி போன்ற பனைமரங்கள் நிறைந்த பகுதிகளில் இப்பருவம் பதனீர் இறக்கும் பருவமானதால் ஒவ்வொரு தெரு முனைகளிலும் பதனீரானது குடங்களில் வைக்கப்பட்டிருக்கும். நடந்து களைப்படைந்தவர்கள் அந்தப் பதனீரை அருந்திவிட்டு பின்னர் மீண்டும் தங்கள் பவனியை தொடர்வர்.

ஆனால் பனையேற்றம் குறைந்துவிட்ட இன்றைய நாட்களில் பதனீர் வழங்கும் முறையும் மிகவும் குறைந்துவிட்டது. கிறிஸ்தவத்தை உலகில் ஏற்படுத்திய இயேசு கிறிஸ்து இஸ்ரவேல் நாட்டவர். அந்நாட்டு வழக்கப்படி ஒருவர் அரசனாக முடிச் சூடப்படப் போகும் போதும் மன்னன் ஒருவன் எதிரிகளை வெற்றிக் கொண்டு தலைநகரம் நோக்கி வரும்போதும் அவனை கோவேறு கழுதை எனப்படும் ஒருவகையான கழுதையின் மேல் ஏற்றி, தரையில் மெல்லிய மரக்கிளைகளைப் பரப்பியும் துணிகளை விரித்தும் குருத்தோலைகளைக் கையில் பிடித்தபடி அம்மன்னனை சத்தமிட்டு வாழ்த்தி அவனது புகழைப்பாடுவது மரபு. இந்தக் கோவேறு கழுதையைப் பற்றின தகவல் விவிலியத்தில் நிறைய இடங்களில் காணக்கிடைக்கின்றன.

இதன் சிறப்பு என்னவென்றால்... கோவேறு கழுதை என்பது பெண் குதிரையும், ஆண் கழுதையையும் இணையச் செய்து (செயற்கைக் கருவூட்டல்) பிறப்பிக்க வைக்கப்படும் கலப்பின உயிரி. இவற்றால் தங்களது இனத்தை விருத்தி செய்ய முடியாது. இது குதிரையின் தன்மையையும் கழுதையின் தன்மையையும் உடையது. குதிரையைவிட கட்டையாகவும் கழுதையைவிட உயரமாகவும் இருக்கும். இவை சாதாரண கழுதைகளைவிட அதிக சுமையை சுமக்கவல்லது. குதிரைகளுக்கு இருப்பதைப் போல அடர்த்தியான முடியுடன் அழகிய வாலை உடையது. குதிரையைப் போன்றே கனைக்கும் சுபாவமுடையது. அந்தக் காலகட்டங்களில் பெரும்பாலான வசதிபடைத்த வீடுகளில் முக்கிய வாகனமாக இந்தக் கோவேறு கழுதைகள் இருந்திருக்கின்றன.

அதைப் போன்றே இன்று நமது பகுதிகளில் குருத்தோலைகளைப் பயன்படுத்துவதைப் போல இஸ்ரவேல் நாட்டில் ஒலிவமரத்தின் குருத்து இலைகளோடான சிறுசிறு கிளைகளைப் பயன்படுத்தி அசைத்து வெற்றியாளர்களை வரவேற்பதும் தங்களது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதும் அந்நாட்டு வழக்கம். அவ்வகையில் விவிலியத்தில் உள்ள கிறிஸ்தவ சித்தாந்தத்தின்படி இயேசு கிறிஸ்து, இராஜாவாக மீண்டும் உலகத்திற்கு வரப் போவதற்கான முன் அடையாளமாக இயசுவை அவ்வாறு அரசனைப் போன்றே எருசலேம் என்ற நகருக்குள் அழைத்துச் சென்றனர். எருசலேம் இஸ்ரவேல் நாட்டின் தலைநகரம்.

இந்தச் சம்பவத்திற்குப்பிறகு தான் அப்போது அங்கிருந்த ரோமப் பேரரசிடம் யூதர்கள் அரசியல் ரீதியான குழப்பத்தை ஏற்படுத்தி இயேசுவை கொலைசெய்துவிட வேண்டும் என்ற தங்களது எண்ணத்தை வலுபடுத்தினர். அந்த நாளை நினைவுகூரும் வகையில் தான் இந்தக் குருத்தோலை ஞாயிறு உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவர்களால் கடைபிடிக்கப்படுகிறது.

## வட திருநெல்வேலி மிஷன் சுற்றுப்பயணம்

# மிஷனெரி கனம். J. T. G. பேரன்புரூக்

### நினைவு தினத்தில் ...

தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டலத்தின் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வட திருநெல்வேலி என்று அழைக்கப்படும் சிவகாசி பகுதிக்கு பேரன்புரூக் நினைவு நாளில் மார்ச் 29 பங்களாச் சுரண்டை சேகரத்தை தாய் சபையாக கொண்ட புளியங்குடி, சாம்பவர்வடகரை, ஊத்துமலை, அதிசயபுரம், சோலைசேரி, தென்காசி வடக்கு சேகரங்களின் சேகர திருச்சபை மக்கள் அந்தஅந்த சேகர தலைவர்கள் தலைமையில் வட நெல்லை பகுதிகளில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு சாம்பவர்வடகரை சேகர குரு அருள்திரு. A. ஜெபரத்தினம் அவர்கள் தலைமையில் நான்கு மினிபஸ் மற்றும் வேன்களில் சுமார் 130 பேர்வரை சென்றிருந்தோம்.

முதலாவதாக நேரே சிவகாசி சாட்சியாபுரம் ஆலயத்திற்கு சென்றோம். அங்கு கோதுமை மணியாக விதைக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், பாட்டக்கரை என்னும் கிராமத்தில் ஜூன் 15, 1844-ல் பிறந்த தானியேல் பவுல் உபதேசியாகத் திகழ்ந்தவரின் 6 வது மகன் அருள்திரு சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் நினைவிடத்தில் அவர்களின் வரலாற்றை அருள்திரு. A. ஜெபரத்தினம் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

வேதாகமத்திற்கு அடுத்தப் படியாக உலகமுழுவதும் பேசப்படும் ஜான் பனியன் எழுதிய Pilgrims Progress நூலின் உரைநடைவடிவ தமிழில் மோட்சப் பிரயாணம் நூல் சிறப்பு வாய்ந்த மொழிபெயர்ப்பு செய்தது இவரே. இன்றைய தபசு நாட்களில் நமது திருமண்டல ஆலயங்களில் அதிகாலையில் வாசிக்கப்படும் ஆத்துமநேசரின் அங்க மகத்துவம் என்ற நூலில் ஆசிரியரும் இவர்தான். மேலும் இவர் பதினாறு நூல்கள் வரை எழுதியுள்ளார். 1890 முதல் நற்போதகம் இதழின் ஆசிரியராகவும், தமிழின் முதல் சிறுகதை ஆசிரியராகவும் மற்றும் குருத்துவ பணியுடன், இலக்கிய பணியும் செய்த அருள்திரு சாமுவேல் பவுல் ஐயர் அவர்களை நினைவு கூர்ந்தோம்.

அடுத்ததாக **நற்செய்தி பணியில் வெற்றியடைய தீட்டும் திட்டங்களில் மிகச் சிறந்த வழி இயேசு காட்டிய வழியே. அது கோதுமை மணிபோல் நிலத்தில் விழுந்து சாவதே.** என்று சொன்ன வட திருநெல்வேலி அப்போஸ்தலன் கனம் T. G. ராக்லாந்து ஐயர் நினைவிடம் சென்றோம். அங்கு சேகர மூப்பர் ராக்லாந்து வரலாற்றை மிக சிறப்பாக ஆழமாக பகிர்ந்து கொண்டார்கள்.

வட திருநெல்வேலியில் சுற்றித் திரிந்து நற்செய்தி சொல்லும் முறையின் மூலம் கிராமங்களுக்கு நற்செய்தியை பறைசாற்றியவர். கற்களும், தூசிகளும் அவரை நோக்கின. தடியால் சரமாரியாக அடிகள் வாங்கியவர். நடக்கக் கூட தெரியாத சிறு பையனும் கூட கல்லைத் தூக்கி எறிந்ததுதான் பரிதாபம். மழை, வெயில், பசி, அவமானம், பேச்சுக்கள், சரீர துன்பங்கள் எதையும் பொருட்படுத்தாது தன் ஊழியப் பணியைத் தொடர்ந்தவர். அதிகாலையில் எழுந்து ஜெபிக்கும் பழக்கமுடையவர். ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்த சுவிசேஷச் செம்மலின் பணிகளையும் நினைவு கூர்ந்தோம்.





எங்களை ராக்லாந்து சேகர தலைவர் அருள்திரு. டேவிட்சன் ஜேக்கப் மற்றும் சேகர பிரதிநிதிகள் சிறப்பாக எங்களை வரவேற்று உபசரித்தார்கள். சேகர தலைவர் அவர்களுக்கும் டாக்டர். ஜியோ ஞானதுரை ஐயா அவர்களுக்கும் நன்றி.

வட திருநெல்வேலி சுற்றுப்பயணத்தின் முக்கிய பனித்தளமான பனையடிப்பட்டிக்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஏற்கனவே வந்திருந்த பங்களாச் சுரண்டை சேகர தலைவர் அருள்திரு.D. வில்சன் சாலோமோன் ஐயா மற்றும் அருள்திரு மேரி வில்சன் அம்மா அவர்கள் தலைமையில் வந்திருந்த சபை மக்கள் மற்றும் பேரன்புரூக் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக மூன்று வேன்களின் வந்திருந்தார்கள்.

ஜான் தியாப்பிலஸ் ஜார்ஜ் பேரன்புரூக் ஐயரவர்கள் இந்தியாவில் நமது தமிழ்நாட்டில் 1844 - 1857 வரை திருநெல்வேலி மாவட்டம் சுரண்டை பகுதிகளில் ஏறத்தாழ 14 ஆண்டுகள் மிஷனரிப் பணி செய்து, பின் ஓராண்டு சிவகாசி பகுதியில் பணியாற்றி, விருதுநகர் மாவட்டம் பனையடிபட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள செந்தட்டி அய்யனார் கோவில் என்ற கிராமத்தில் அருட்பணி செய்ய சென்றபோது காலரா நோயினால் பாதிக்கப்பட்டு 1858 மார்ச் 29ம் தேதி, தனது 40 வது வயதில் மரித்துப் போன பேரன்புரூக் அவர்களை நினைவு கூர்ந்தோம்.

வட திருநெல்வேலி ஊழியங்களின் நட்சத்திரங்களில் ஒருவரான கனம்.எவ்ரி (Every) அவர்களின் கல்லறை. மற்றும் நல்ல பல கீர்த்தனைகளை நமக்கு தந்த மரியான் உபதேசியார் அவர்களின் கல்லறை மற்றும் அருள்திரு. விசுவாசம் ஞானமுத்து ஐயா அவர்களின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தி அவர்கள் செய்த பணிகளை நினைவு கூர்ந்தோம்.

மாலை 6.00 மணிக்கு பனையடிப்பட்டி ஆலயத்தில் பரி. நற்கருணை ஆராதனை பேரன்புரூக் நினைவு ஆராதனை மிக சிறப்பாக நடைபெற்றது. ஆலயம் நிரம்பி வழிந்தது. சாம்பவர்வடகரை சேகர குரு அருள்திரு. A. ஜெபரத்தினம் ஐயரவர்கள் மிஷனெரிகள் வரலாற்றை பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் பங்களாச் சுரண்டை சேகர தலைவர் அருள்திரு.D. வில்சன் சாலோமோன் ஐயா அவர்கள் செய்தியை வழங்கினார்கள். அந்த ஆலய ஆல்டர் துணி தேவைகளை வந்திருந்த ஊத்துமலை சேகர மக்கள் செய்து தருவதாக வாக்கு பண்ணினார்கள்.

எங்களை வரவேற்ற பனையடிப்பட்டி சேகர குரு அருள்திரு. பிரவீன் அவர்களுக்கும் இரவு உணவு மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த கமிட்டி உறுப்பினர்களுக்கும் நன்றி.

மிஷனெரி கனம் பேரன்புரூக் நினைவு தினத்தில் வட திருநெல்வேலி சுற்றுப்பயணமாகவும் தாய் திருச்சபை மக்களை ஊக்குவித்து, குறுகிய காலத்தில் திட்டமிட்டு ஏற்பாடு செய்த சாம்பவர்வடகரை சேகர குரு அருள்திரு.A. ஜெபரத்தினம் ஐயா அவர்களுக்கும் பங்களாச் சுரண்டை சேகர தலைவர் அருள்திரு.D. வில்சன் சாலோமோன் ஐயா அவர்களுக்கும் நன்றி.

நம்முடைய சபை மக்களும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்க்கவும் பல்வேறு பணிகளின் மத்தியிலும் சபை மக்களை அன்போடு அழைத்து வந்த சாம்பவர்வடகரை சேகர தலைவரான அருள்திரு. A. ஜெபரத்தினம் ஐயரவர்கள், சேகர தலைவர்களான புளியங்குடி அருள்திரு.G. சார்லஸ் ஐயரவர்கள், தென்காசி வடக்கு சேகர தலைவரான அருள்திரு.T. சாமுவேல் ஐயரவர்கள், ஊத்துமலை சேகர தலைவரான அருள்திரு.G. சோல்வின் மேரிட்டர் ஐயரவர்கள், அதிசயபுரம் சேகர தலைவரான அருள்திரு.S. ஸ்டீபன் கமல்சன் ஐயரவர்கள், சோலைசேரி டீக்கன்.E பிரவீன் பெல்சன்துரை ஐயரவர்கள் மற்றும் வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கும். சபை மக்கள் ஒவ்வொருவருக்கும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.










# சீயோன்

# சபை வரலாறு

A.S.A.R. பாலச்சந்திரன் ,
சுரண்டை

தென்காசி மாவட்டம், சுரண்டை நகராட்சிக்குட்பட்ட திருநெல்வேலி திருமண்டலம், புதுச் சுரண்டை சேகர கிளைச் சபை தற்போதைய சுரண்டை சீயோன் சேகரத்தின் வளர்ச்சிப் பணி குறித்த விபரங்களை எழுத கிருபை செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு குறிப்பிட்ட ஞாயிறு அன்று புதுச் சுரண்டை ஆலயத்தில் திருச்சபை மக்கள் கூட்டம் அதிகம் இருந்தது. உள்ளே உட்கார இடம் இல்லாமல் அநேகர் மண்டபத்தில் இருந்தார்கள். மேலும் பலர் மணடபத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். இதைப் பார்த்தபொழுது சீயோன் வளாகத்தில் ஒரு ஆலயம் கட்டி, ஒரு சபையை ஏற்படுத்தினால்தான் இந்த கூட்டம் ஓரளவு குறையும். ஆகவே எப்படியும் சீயோன் வளாகத்தில் ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தை கர்த்தர் தந்தார். அந்த வாரத்தில் சபையின் பெரியோர்கள் சிலரை அவர்கள் வீடுகளில் போய் பார்த்தோம். என்னோடு அருள்திரு. ஞானதுரை ஐயர் அவர்களும், திரு. P. D. ஞானபிரகாசம் ஆசிரியர் அவர்களும் வந்தார்கள். எல்லாரிடமும் பேசும்பொழுது, புதுச் சுரண்டை ஆலய இடப்பற்றாகுறை பற்றியும், அநேகர் காமராஜ் நகர் பகுதிகளில் இருந்து நடந்து வருகிறார்கள். நடக்க கஷ்டப்பட்ட அநேகர் ஆலயத்திற்கு வருவதில்லை. ஆகவே சீயோன் வளாகத்தில் ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்று கூறினோம். எல்லாருமே சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள். கடைசியில் காலஞ் சென்ற திரு. ஜோதிமணி நாடார் அவர்களைப் பார்த்து ஆலயம் கட்டுவதின் அவசியத்தை பற்றி கூறினோம். கேட்டுக்கொண்டே இருந்தார்கள். பதில் ஒன்றும் சொல்லவில்லை. கடைசியாக நான் அவர்களிடம் பேசும்பொழுது ஆலயம் கட்ட ஓரளவு பணத்திற்கு ஏற்பாடு செய்து கொடுங்கள். மற்ற காரியங்களை நான் கூடவே இருந்து பார்த்து கவனித்து கொள்கிறேன் என்றேன். சரி என்பதற்கு அடையாளமாக சிறிது தலை அசைத்தார்கள்.

இதற்கிடையில் சீயோன் வளாகத்தில்

திருமண மண்டபம் கட்ட வேண்டும் என்று பிரயாசப்பட்டார்கள். இரண்டு தடவை மண்டபம் மாடல் பார்க்க திருநெல்வேலி, பாளை போன்ற பகுதிகளுக்குச் சென்றார்கள். என்னைக் கூப்பிட்டார்கள். நான் அதில் கட்டினால் ஆலயம் மட்டும்தான் கட்ட வேண்டும் என்று கூறி அவர்களோடு போகவில்லை. இதற்கிடையில் மண்டபம் கட்ட என்று 3 லோடு செங்கல் வாங்கி இறக்கி வைத்திருந்தார்கள். பிறகு ஏதோ காரணத்தினால் 3 லோடு செங்கல்களும் எடுத்து செல்லப்பட்டன.

அடுத்து எப்பொழுது ஆலய கட்டுமான பணியை ஆரம்பிப்பது என்ற பொழுது சிலர் ஓரளவு பணம் சேகரித்து கொண்டு ஜனவரி 2005 ல் வேலையை ஆரம்பிப்போம் என்றார்கள். எனக்கு கடவுள் கொடுத்த இந்த திட்டத்தை உடனே ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகம் இருந்தது. 8.8.2004ல் புதுச்சுரண்டை சேகர தோத்திரப் பண்டிகை நடைபெற இருந்தது. பண்டிகைக்கு அப்பொழுது பேராயராக இருந்த Rt. Rev. ஜேசன் தர்மராஜ் அவர்களை வைத்து ஜெபித்து ஆரம்பிப்போம் என்று சொன்னபொழுது எல்லாரும் ஏற்றுக்கொண்டார்கள். அதின்படி 8.8.2004 அன்று நடைபெற்ற ஸ்தோத்திர பண்டிகை ஆராதனை ஆரம்பிப்பதற்கு முன்பு பேராயர் அவர்களை வைத்து ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. காமராஜ் நகர் பகுதி மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தொடர்ந்து ஆலயம் கட்டுவதற்கு 10 செண்டு இடம், புதுச் சுரண்டை மகமை கமிட்டி நிர்வாகத்திலிருந்து திருநெல்வேலி திருமண்டல பெயரில் பத்திரம் முடிக்கப்பட்டது. உடனே பிளான் போட்டு பஞ்சாயத்து போர்டில் கொடுத்துவிட்டு, மறுநாளே வேலைகளை ஆரம்பித்தோம். முதலில் பில்லர் போடுவதற்கு வானம் தோண்டி ஆரம்பித்தோம். சில இடங்களில் 6 அடியில் கீழே பாறை வந்தது. சில இடங்களில் 2 அடியிலேயே பாறை வந்தது. அதையெல்லாம் வெடி வைத்து உடைத்து எல்லா இடமும் 6 அடி ஆழமாக வைத்து, தளமண் அடித்தல், செங்கல் கட்டு போன்ற பல்வேறு வேலைகள் வேகமாக நடைபெற்று வந்தன. தினமும் நானும், அருள்திரு. ஞானதுரை ஐயரும் காலை 7:30 மணி முதல் 9 மணி வரை வீடு, வீடாகச் சென்று ஆலய கட்டுமானப் பணிக்கு தேவையான பணம் சேகரித்தோம். அநேகர் உற்சாகமாக கொடுத்து உதவினார்கள். இப்படியாக பலரின் உதவியோடு ஆலய வேலை வேகமாக நடைபெற்றது. 2005 - மார்ச் 25 க்குப் பிறகுதான் பிரச்சனை ஏற்பட்டது. இங்குள்ள பிறமத அமைப்பினர் ஆலயம் கட்டி மதம் மாற்றுகிறார்கள் என்று ஒரு புகார் மனு கொடுத்துவிட்டார்கள், 2005 - மார்ச் மாதம் சர்வேயர் வந்து இடத்தை பார்த்தார். மறுநாள் V.K.புதூர் தாசில்தார் வந்து பார்த்துவிட்டு இவ்வளவு கட்டிருக்கக் கூடாது என்று சொல்லி கொண்டிருந்தார். தொடர்ந்து தென்காசி R.D.O. போன்ற முக்கியஸ்தர்களும் வந்து ஆலயம் கட்டப்பட்டிருப்பதை பார்த்து போனார்கள்.

2005 ம் ஆண்டு மே மாதம் திரு. N. சௌந்தரராஜ் ஆசிரியர் ஓய்வுபெற்ற பின் ஆலய காரியங்களில் என்னோடு அதிகம் பிரயாசப்பட்டார்கள். தினமும் தாசில்தார் அலுவலகம், கலெக்டர் அலுவலகம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் அப்பொழுது மந்திரியாக இருந்த சங்கரன்கோவில் திரு. கருப்பசாமி, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவி அண்ணன், பேராயர். சிஸ்வா பிரகாஷ் போன்ற பலரையும் பார்க்க பல நாள் அலைந்தோம். கோவில் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து திரு. ராமகோபாலன் என்பவரது தலைமையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. அவர்கள் ஆலயம் கட்டுவதை தடை செய்ய எவ்வளவு தீவிரமாய் செயல்பட்டார்களோ, அதே அளவில் நாங்கள் ஆலயம் கட்ட அனுமதி வாங்க தீவிரமாக முயற்சி செய்தோம். கிட்டதட்ட 9 மாதங்கள் ஆலய கட்டுமான பணிகள் தடைபட்டது. 2006 ஜனவரியில் கலெக்டர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமையன்று மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புகார் மனு கொடுத்தோம். அதை தொடர்ந்து 2006 ஜனவரி 11 ம் தேதி மற்றும் 21 ம் தேதிகளில் DRO முன்பு சமாதான கூட்டம் நடைபெற்றது. பிற மத மக்கள் ஆலயம் கட்டுவதை தடை செய்வதிலேயே தீவிரமாகச் செயல்பட்டனர்.

அப்பொழுது மாவட்ட ஆட்சியராக இருந்த திரு. சுனில் பாலிவால் மாற்றப்பட்டு அவருக்குப்பின் திரு. பிரகாஷ் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றார். பதவி ஏற்ற அன்றே (26.5.2006) ஆலயம் கட்ட அனுமதித்து ஆட்சியர் கையெழுத்திட்டார். மறுநாள் DRO, பேராயர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரைப் பார்த்து நன்றி தெரிவித்தோம். 2006 May 30 ல் ஆலயம் கட்டுவதற்கான அனுமதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கிடைத்தது. அன்று அனுமதி கடிதம் வாங்க காலை 9 மணி முதல் 3 மணி வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காத்து கிடந்து ஒரு வழியாக வாங்கினோம். அனுமதி வாங்கியவுடன் கர்த்தருக்கு நன்றி சொல்லிவிட்டு, சுரண்டை வந்தோம். சுரண்டையில் ஆலயத்திற்கு அனுமதி கிடைத்தது பற்றி, சேகர குருவானவர் உட்பட யாரிடமும் சொல்லவில்லை. மறுநாள் பஞ்சாயத்து செயல் அலுவலரை அவருடைய கிராமத்தில் நேரில் சென்று அனுமதி வாங்கிய விபரத்தை சொல்லி அதற்கான தீர்வை போட ஏற்பாடு செய்தோம். பஞ்சாயத்து செயல் அலுவலரும் எங்களோடு அலுவலகம் வந்து தீர்வை போட்டு ரசீது தந்தார். அதின்பின் தான் ஆலய கட்ட அனுமதி கிடைத்தது குறித்து மற்ற சபை மக்களுக்கு தெரியப்படுத்தினோம். மேலும் வழக்கறிஞர் மூலம் ஒரு கேவியட் ஒன்று வாங்கினோம்.

தொடர்ந்து கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன. வேலை பாதி முடிந்த நிலையில் Rt. Rev. ஜெயபால் டேவிட் பேராயர் அவர்களால் ஆலயம் 20.8.06 பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2006 அக்டோபர் 22 முதல் புதுச் சுரண்டை சீயோன் - தனித் தனி ஆராதனைகள் நடைபெற்றன. 12.11.2006-ல் முதல் நற்கருணை ஆராதனை சீயோன் ஆலயத்தில் நடைபெற்றது. தொடர்ந்து ஜன்னல் முதலிய கதவு வேலைகளை, ஒயரிங் போன்ற காரியங்கள் நடைபெற்று 2006 டிசம்பரில் வேலைகளை முடித்து சீயோன் ஆலய முக்கியஸ்தர்களிடம் ஒப்படைத்தோம். 4000 சதுர அடியில் (உள் அளவு) கொண்ட இந்த ஆலயம் 28 லட்சம் ரூபாயில் கட்டி முடித்தோம். இதற்கென்று இஞ்சினியர் யாரையும் வைத்துக்கொள்ளவில்லை. கர்த்தர் கொடுத்த ஞானத்தோடு கட்டினோம். சபை வளர்ந்து பெருக வாழ்த்துகிறோம்.



# கிளாரிந்தா கண்டோன்மென்ட் புதைகுழி வரலாறு

பாளையக்காரர்கள் கோட்டை கட்டி வாழ்ந்த இடம் பாளையம்கோட்டை அதில் பட்டாளத்தார் முகாமிட்டிருந்த பகுதி மிலிட்டரி லைன். கண்டோன்மென்ட் புதைகுழி (இராணுவ முகாம் கல்லறைகள் இருக்கும் இடம்) பாளையங்கோட்டையில் உள்ள கிளாரிந்தா எழுப்பிய ஆலயத்தை ஒட்டிய பகுதியில் ஐரோப்பியரைப் புதைக்கும் இடம் இருக்கிறது. இந்த இடம் 1775ம் ஆண்டில் தோன்றியதாக பேராயர் கால்டுவெல் எழுதுகிறார். சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பு நிலையத்தில் (Tamil Nadu Archives) திருநெல்வேலியில் இறந்துபோன ஐரோப்பியர்களின் பெயர்ப்பட்டியல் இருக்கிறது.

1790 முதல் 1872 வரை உள்ள சிவில் சர்வீஸில் பணி செய்த மதிப்புமிக்க மற்றும் முன்மாதிரியான தனிப்பட்ட மதிப்பு மிக்க உயர் பதவியில் இருந்த கர்னல், பொது நேர்மையானவர்களான இவ்வுலகத்தை விட்டு சென்றவர்களின் நினைவிடங்கள் மற்றும் ஐரோப்பியர்களையும் சேர்த்து அடக்கம் பண்ணப்பட்டவர்களின் எண்ணிக்கை 112. (தமிழ் கல்லறை தவிர்த்து)

மிலிட்டரி லைன் ஆலய காம்பவுண்டில் ஐரோப்பியர்களின் தமிழ் மிஷனெரின் குருமார்களின் கல்லறை தவிர்த்து 1784 முதல் 1888 வரை அடக்கம் பண்ணப்பட்ட எண்ணிக்கை 98.

பாளையங்கோட்டை கல்லறைத் தோட்டத்தைப்பற்றி **பேராயர் கால்ட்வல் பின்வருமாறு எழுதினார்.**

1775 முதல் மரித்தவர்களை அடக்கம்பண்ணியிருக்கும் சமாதிகளையும் அங்கே எழுப்பியிருக்குங் கல்லறைகளையும் பரிசோதித்தேன். இந்த சமாதிகளின் தூது தெளிவாகவும் திட்டமாகவும் தொனிக்கிறது . 1806 - ம் வருஷ முதல், கிறிஸ்துவின் மூலம் கடவுளின் கிருபை , மரணத்திற்குப் பின்னுள்ள ஜீவன், வேத புஸ்தகத்திலுள்ள ஆறுதலான வசனங்கள் கொத்தியிருந்ததைக் கண்டேன். பழைய கல்லறைகளில் உருக்கமான இக்கற்பிரசங்கங்களைக் காணவில்லை.

நாஸ்துதியும், நானாவித சிந்தைனைகளுங் கொத்தப்பட்டிருக்கின்றன. கவிதைளாகவோ, வசனமாகவோ, துயரமாகவோ, அறிவு புகட்டத்தக்கதாகவோ இருந்தாலும், மரித்தோரின் விசுவாசம், நம்பிக்கையைப் பற்றி ஒரு பதமுங் காணவில்லை. கடவுள் நாமமோ, கிறிஸ்துவின் பெயரோ அங்கு இல்லை வருஷ முதலே கிறிஸ்தவத் தத்துவங்களைக் கொண்ட சமாதி வசனங்களைப் பார்க்கலாம் .

1815 - ல் மரித்த சாமுவேல் சாயரும், 1819 - ல் இறந்த கர்ணல் டிறாட்டரும் இங்கே அடக்கப்பட்டார்கள் என்பதே.

1818 இல் ஜேம்ஸ் ஹாப்வ் ஐயர் S.P.C.K. சங்கத்தினரின் உதவி பெற்று அதைப் பழுது பார்த்தார். 1826 இல் சென்னை அரசு ஆலயத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவரைக் கட்டினார்கள்.

ஜெனிக்கே அப்போதிருந்த திருநெல்வேலி கலெக்டர் டோரினோடும், (Torin) சம்பளப் பட்டுவாடா அதிகாரி மார்ட்டின் மற்றும் (Martin) கோட்டை அதிகாரிகளுடனும், நட்புடன் பழகி, கிளாரிந்தா ஆலயத்தில் நடைபெறும் ஞாயிறு ஆராதனைகளில் அவர்களைப் பங்கெடுக்கச் செய்தார்.


1820 முதல் 1838 வரை பாளையங்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு மிஷனரி ஊழியம் செய்த நெல்லை அப்போஸ்தலர் கனம்.ரேனியஸ் ஐயரவர்களும் மிஷன் ரிப்போர்ட்டில் குளோரிந்தா அம்மையாரின் ஊழியம் குறித்து எந்தவித குறிப்பையும் Mission Journals களிலோ C.M.S சங்க மேலிடத்திற்கோ தெரிவிக்கவில்லை.

1820 இல் ரேனியஸ் ஐயரவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்குள் காலடி வைத்தவுடன் திருநெல்வேலி மாவட்டம் குறித்த புள்ளி விவரங்களை மக்கள் தொகை விபரங்களை சமயம் சார்ந்த மக்கள் விவரங்களை குறிப்பிட்டு எழுதும்போது சீர்திருத்த கிறிஸ்தவ தேவாலயங்கள் 15 உள்ளது எனவும் அதில் பிராமண மாது ஒருவர் கட்டிய தேவாலயம் பெரிதாக உள்ளது என எழுதியுள்ளார். குளோரிந்தா அம்மையார் குறித்து நெல்லை அப்போஸ்தலர் கனம். ரேனியஸ் ஐயரவர்கள் ஓர் பிராமண மாது என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார்.

காலம் காலமாக பராமரிக்கப்படாமல் கிடந்த கிளாரிந்தா சிற்றாலயத்தை திருநெல்வேலி கிறிஸ்தவர்கள்கூட கிளாரிந்தாவை சரிவரப் புரிந்து கொள்ளாமல் தப்பும் தவறுமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர் கட்டிய கோவில்கூட பராமரிப்பு இன்றி இருந்தது.

1959-ம் ஆண்டு கிளாரிந்தா கட்டிய ஆலயம் புதுப்பிக்கப் பெற்றது. அதற்கு முழு மூச்சுடன் உழைத்தவர்கள் அப்போது சி.எம்.எஸ். மிஷனெரியான யோவான் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும் இருந்த கனம் ஏ.ஹெச். டாமர்ஸ் (A.H.Dammers) ஐயரவர்களும், காலஞ்சென்ற மிலிட்டரி லைன் குருவானவராகிய டாக்டர் க.நோ. காந்தையா அவர்களுமே ஆவர். 1959 ஆம் ஆண்டிலிருந்தே மிலிட்டரி லைன் திருச்சபை மக்கள் தான் பாதுகாத்து வருகின்றனர்.

இன்று கிளாரிந்தா ஆலயத்தில் பெரும்பான்மையாக கிறிஸ்தவரல்லாதோர் பங்கெடுத்து வருகின்றனர். சுமார் ஒரு நாளைக்கு கிளாரிந்தா ஆலயத்திற்கு வருகின்றவர்கள் எண்ணிக்கை இரண்டாயிரத்தை தாண்டி மக்கள் வருகின்றார்கள்.







251

TINNEVELLY DISTRICT—*cont.*

| Serial number. (1) | Date. (2) | Name. (3) | Inscription. (4) |
|---|---|---|---|
| | | | CANTONMENT BURIAL GROUND AT PALAMCOTTAH—*cont.* |
| 2619 | 10th Nov. 1792. | ANN PRESTON .. | ANN, daughter of Lieutenant and Mary PRESTON, aged 5 days. William Preston, ensign 1st May 1783, Lieutenant, 21 August 1790, 16th N.I., Commanding a Revenue Battalion, died at Trichy., on 21 March 1802 (No. 2703). |
| 2620 | 22nd June 1794. | JAMES and MARTHA LANDON. | Here lie the bodies of JAMES LANDON, Esq. and of Margaret Martha his wife, who with their new born infant here also interred departed this life in June MDCCXCIV. To this amiable couple, whose early loss deprived this world of a bright example of conjugal felicity, Friendship has erected this monument in testimony of sincere regret. Writer in 1777. Collector of the Centre division of Arcot in 1792. He married Miss Margaret Maria Dent, December 24th, 1788. Richard Moore married Charlotte Landon, March 9, 1796, at Vizagapatam. |



மன்னா செல்வகுமார்

அத்தியாயம் 11

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர் ஜான்சி பால்ராஜ்,
ஆசிரியர் , திருநெல்வேலி

டோனாவூரைச் சுற்றிய கிராமங்களிலிருந்த கிறித்தவ ஆலயங்களில் தேவதாசி முறையைப் பற்றின விழிப்புணர்வை ஏற்படுத்த ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கும் வழிபாட்டு நேரங்களை ஆலய உபதேசிகர்கள் பயன்படுத்தினர்.

ஏமியால் மீட்கப்பட்ட ப்ரீனாவைப் பற்றியும், ஏமிக் கார்மைக்கேலை நாடிவரும் ஆதரவற்ற பெண்களைப் பற்றின தகவல்களும் காட்டுத்தீப் போல பரவியது. ஓரிரு மாதங்களில் தமிழ்நாடு முழுவதும் பரவி மற்ற மாநிலங்களுக்குள்ளும் தெரிய ஆரம்பித்தது. இந்நிலையில் தேவதாசி குழந்தைகளை மட்டுமல்லாமல் பெற்றோரால் புறக்கணிக்கப்படும் பெண் குழந்தைகளையும் காப்பாற்றி வளர்க்க விரும்பினார் ஏமி.

தேவாலயப் பொறுப்பாளர்கள் உவாக்கரின் அழைப்பை ஏற்று டோனாவூரில் அடிக்கடி கூடி இதைப்பற்றி ஆலோசித்தனர். அந்தந்த கிராமங்களில், பெண் குழந்தைகள் தேவதாசி முறைக்கு பலியாக்கப்படும் செய்தி கிடைத்ததும் எவ்வாறு தகவல் தருவது, எப்படி அவர்களோடு பேசி தேவதாசியர் வசம் குழந்தைகள் செல்லாமல் தடுப்பது என்பன போன்ற அறிவுரைகளை ஏமியும் உவாக்கரும் தொடர்ந்து வளங்கி வந்தனர். ஒவ்வொரு கிறிஸ்தவ ஆலய உபதேசிகர்களும் இப்பணியினை இறைப்பணியின் முக்கியப் பகுதியாகவே கருதி செயல்படத் தொடங்கினர்.

ஓரிரு நாட்களுக்குள் இருத்தம்பாக்கம் என்ற ஊரிலிருந்த ஆலயத்தின் உபதேசிகரிடமிருந்து ஒரு தகவல் வந்தது. தாயை இழந்த பன்னிரெண்டு வயது சிறுமி ஒருத்தியை அவளது தந்தை தேவதாசியாரிடம் கொடுத்துவிட்டு, தான் மறுமணம் செய்ய போவதென்ற முடிவில் இருப்பதாகவும் அச்சிறுமியை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்றும் ஆலய பணியாளரான கோயில் குட்டியாரிடம் அவர் தகவல் சொல்லி அனுப்பி வைத்தார்.

அன்று இரவு ஒன்பது மணியளவில் அந்தக் கோயில் குட்டியார் டோனாவூருக்கு வந்து சேர்ந்தார். ஏமியிடம் ஒன்றுவிடாமல் அப்பெண்ணைக் குறித்தச் செய்திகளைக் கூறினார். அதைக் கேள்விப் பட்டதும், இப்போதே கிளம்பியாக வேண்டும் என்றார் ஏமி. தேவாயி, அருளாயி ஆகிய இருவரும் நாங்கள் மட்டும் இந்தத் தம்பியோடு சென்று அவளை எப்படியாவது இங்கு கூட்டி வந்து விடுகிறோம் . அந்த ஊர் சேரன்மகாதேவிக்கு வடக்கே சில மைல் தொலைவில் இருக்கிறது. நீங்க இங்கேயே ஒய்வு எடுங்கம்மா என்றனர்.



இல்ல… இல்ல அந்தப் பெண் நமது வீட்டிற்கு வந்து சேர்ந்த பிறகு தான் ஓய்வெல்லாம். என்றவர் புறப்பட்டு நின்ற மாட்டு வண்டியை நோக்கி நடந்தார். தோழியர் இருவரும் கையில் ஆளுக்கொரு லாந்தர் விளக்கோடு பின்தொடர்ந்து நடந்தனர். ஒன்று லேசாக ஒளியை சிந்தி மின்னிக்கொண்டிருந்தது. மற்றொன்று அணைத்து வைக்கப்பட்டிருந்தது.

இரவை துழைத்து ஜல்… ஜல்… என்று வண்டி இரண்டரை மணி நேரத்தில் இருத்தம்பாக்கம் சென்று சேர்ந்தது. வண்டி அவ்வூர் உபதேசியார் வீட்டின் முன் நின்ற போது மணி இரவு ஒன்றரை. உபதேசியார் கொஞ்சமும் இதை எதிர்பார்க்கவில்லை. எப்படியும் ஓரிருநாட்களில் வரலாம் என்று நினைத்தவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. தான்

அனுப்பிய கோவில் குட்டியார் என்று அழைக்கப்படும் கோவில் உதவியாளர் அவர்களோடு வழிகாட்டியாக வந்திருந்தார்.

முதலில் அவர் குதித்து இரங்கி, பெண்கள் மூவரும் இரங்கிட உதவினார்.

சிறிய ஓலைக் குடிசை வீட்டில் குடும்பமாக வாழ்ந்த அந்த உபதேசியார், எங்கு இவர்களைத் தங்க வைப்பதென்று தவிப்பதை அவரது லேசான பரபரப்பும் அசதியான கண்களும் ஏமிக்கு புரிய வைத்தன. வீட்டிற்கு பின்புறம் மாட்டு கொட்டகை இருப்பது தெரியவே, அது யாருடையது என்றார் ஏமி.

நம்மளுடையது தான் அம்மா என்றார்., அவர். அப்படியா, அது போதும் எங்களுக்கு. மணி இரண்டாக போகிறது. நாங்கள் அங்கு தாராளமாகத் தங்கிக் கொள்கிறோம் என்றார்.

அய்யோ.... வீட்டிற்குள் வாங்க அம்மா, வெளியில் நின்றுகொண்டே ஏதேதோ பேசுகிறீர்கள் என்றார் உபதேசியார். சிறிய அந்த மண் குடிசை, சுத்தமாக இருந்தது. சாணத்தால் மெழுகப்பட்டத் தரையில் நீண்ட சேலையை விரித்து பத்து, பன்னிரெண்டு, ஐந்து, ஆறு போன்ற வயதுகளில் குழந்தைகள் குறுக்கும் நெடுக்குமாக படுத்து உறங்கி கொண்டிருந்தனர். அடுக்களையாக மறைக்கப்பட்டிருந்த அந்த வீட்டின் ஓர் ஓரத்திலிருந்து தூக்கக் கலக்கத்தில் உபதேசியாரின் மனைவியான அந்த இளம்பெண் தலையைச் சரிசெய்தபடி, முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்து வந்தாள். இவள் என் மனைவி ஜெபகண்ணம்மா என்றார் உபதேசியார்.

ஏமியைப் பற்றி ஏற்கெனவே தன் மனைவியிடம் சொல்லியிருந்தார், அவர். உடனே புரிந்து கொண்டவள் மிக மெல்லிய குரலில் வாங்கம்மா... உள்ள ...என்றாள் வணங்கியபடியே.

உள்ளே நிற்பதற்கோ அமர்வதற்கோ இடமில்லை. ஆனாலும் அன்பின் மிகுதியினால் அவளது மனதிற்குள் நிறைய இடம் இருந்ததை மூவரும் உணர்ந்தனர். அன்புத் ததும்பும் பார்வையோடு, நாங்கள் பின்புறம் வழியாக வருகிறோம்மா என்று வீட்டைச் சுற்றி நடந்து மாட்டுக் கொட்டகையில் கிடந்த நீண்ட மரப் பலகைகளில் அமரந்தனர்.

மணி இரண்டு தாண்டியாச்சு..

இன்னும் கொஞ்ச நேரம் தானே இங்கயே தங்கலாம் என்றதோடு... உடனே அந்தப் பெண் பிள்ளையைப் பற்றின பேச்சை எடுத்தார் ஏமி.

தேவதாசிகளுக்கு இப்படி கைவிடப்பட்ட பெண்கள், குழந்தைகள் இருப்பதை தெரிவிப்பதற்கென்றே ஊர்கள்தோறும் ஆட்கள் உண்டு. நேற்று மாலையும் கோயில்ல இருந்து இரண்டுபேர் அந்தப் பிள்ளையின் தகப்பனோடு பேசிட்டு போயிருக்கிறதா ஊர்ல சொன்னாங்க. அதனாலதான் உடனே உங்களுக்கு ஆள் அனுப்பினேன்.

இனி நாமும் ஊர்கள் தோறும் தகவல் சேகரிக்கும் ஆட்களாக மாறியாக வேண்டும் என்ற ஏமி, அந்தத் தகப்பனை இப்போதே போய் அழைத்து வந்தால் என்ன... என்றார்.

அம்மா உங்கள் அவசரம் எனக்கு புரிகிறது. ஆனால் இந்த இரவுக்குள் எதுவும் நடக்க முடியாதம்மா. பொதுவா அந்த தேவதாசிகள் கோவிலுக்கு நல்லநாள் பார்த்துதான் யாரையும் அழைச்சிட்டு போவார்கள். இந்தப் பிள்ளையையும் வரும் புதன் கிழமைதான் கடமைக்கு சில சடங்குகளை நடத்தி கூட்டிக் கொண்டு போவதாக இந்த ஊர் மாரியம்மன் கோயில் பூசாரி எங்கிட்ட சொன்னான். அதற்குள் அவள் நமது குழந்தையாகி விட வேண்டும் என்றாள் தேவாயி. ஆமாம் கடவுள் தான் நமக்கு இதைக் கைக்கூடி வரச் செய்ய வேண்டும்.. செய்வார், என்று நம்புவோம்.

நாம் கவனமாக செயல்படுவோம். சரி நீங்க போய் தூங்குங்க. நாங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம் என்ற ஏமி உபதேசியாரைப் பார்க்க...

இல்லம்மா நாங்களும் உங்களோடு சேர்ந்து ஜெபிக்க விரும்புகிறோம் என்றதும், வைக்கோல் படைப்பிலிருந்து வைக்கோல்களைப் பிடுங்கி, பரப்பி தூசியும் அழுக்குமாக தென்பட்ட தரையை மறைத்து அதில் வண்டியோட்டி உட்பட எல்லோருமே அமர்ந்தனர்.

பனங்கம்புகளால் தாங்கப்பட்டு நின்று கொண்டிருந்த அந்த மாட்டுக்கொட்டகைக்கு புதுப் பனையோலைகள் கூரையாக இருந்தன. நான்கு பக்கமும் சுமார் மூன்றடி உயரத்தில் மண்சுவர் எழுப்பப்பட்டு இருந்தது. வெளியிலிருந்து பார்த்தால் அமர்ந்திருக்கும் ஆட்களின் தலைகள் மட்டும் தெரிய கூடிய அளவில் சுவர்களுக்கும் ஓலைக்கூரைக்கும் இடையே இடைவெளி இருந்தது. ஒருபக்கம் இரண்டு மாடுகளும் ஒரு கன்று குட்டியும் மறு ஓரத்தில் மூன்று ஆடுகளும் கட்டப்பட்டிருக்க, மற்றொரு ஓரத்தில் இவர்களது ஆக்கிரமிப்பால் அந்த மாட்டுக் கொட்டகை நிரம்பி வழிந்தது. புதிய ஆட்களின் வரவால் மாடுகள் சற்றுக்கலைந்தபடி எழும்பி நின்று கொண்டிருக்க திடீரென ஒரு மாடு சளசளவென மூத்திரத்தை திறந்து விட்டது.

நீர் தேங்காமல் வழிந்தோட போடப்பட்ட அகலமான கல்தரை எல்லோர் மேலும் பட்சபாதமின்றி வெதுவெதுப்பான மூத்திரத்தைத் தெளித்தது. அனைவருமே சற்று ஒதுங்கியபடி சிரித்துக்கொண்டனர்.

அந்த ஊரில் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் மக்கள் நடமாட்டம் தொடங்கி விட்டது. தொலைவில் உள்ள தோட்டம் தொறவுகளுக்கு போகிறவர்கள் ஆடு, மாடுகளோடு சென்று கொண்டிருந்தனர்.

அம்மா, நான் போய் அவனை கூட்டிக்கொண்டு வருகிறேன், வீடு அடுத்த தெருவில்தான் இருக்கு என்ற உபதேசியார் கோயில்குட்டியாரை பார்வையால் தலையசைத்து அழைத்தார்.

என் மனைவி உங்களுக்கு கூழ் காய்க்கிறாள் குடிச்சிட்டிருங்க. நாங்க போய்ட்டு உடனே வந்துடுறோம் என்றபடி வேகமாக நடந்தனர்.

வெளித்திண்ணையில் படுத்திருந்தான்

வெள்ளையன்.

சத்தம் கேட்டு எழுந்து, வாங்க சார்வாள்... என்ன இந்த நேரத்தில் இந்தப் பக்கம்? இருங்க, இருங்க என்று திண்ணையில் ஒரு ஓரத்திற்கு நகர்ந்தபடி அவர்களுக்கு இடம் கொடுத்தான்.

அது வந்து.. வெள்ளையா, உன்னை தான் பார்க்க வந்தோம் ஒரு விசயமா...! அதான் தெரியுதே சார்வாள் சொல்லுங்க, முதல்ல இருங்க இதுல என்று திண்ணையிலிருந்த தூசியை கையால் தட்டிக் கொண்டே காட்டினான்.

ஒன்னுமில்ல வெள்ளையா, ஒனக்கு அடுத்த மாசம் கல்யாணம் என்று கேள்விப்பட்டேன்.

ஆமா... வேற என்ன செய்ய சார்வாள். கருங்குளத்துல தான் பொண்ணு. தூரத்து சொந்தம்தான். சரி அதுக்கு இப்பென்ன சார்வாள்...!? நீங்க பொடிவச்சி ஏதோ பேச வார மாதிரில்லா இருக்கு, வந்த காரியத்த சொல்லுங்க... பயமா இருக்கு எனக்கு.

ஒன்றுமில்லப்பா.... உன் மகளை கோயிலுக்கு கொடுக்க போறதா சொன்னியாமே.

ஆமா... வேறென்ன செய்ய, சாமி புண்ணியத்தோட கடைசிவர சுமங்கலியா பாதுகாப்பா இருப்பா. நமக்கும் எந்த பயமும் இருக்காது. கல்யாணம்பண்ணி கொடுத்துட்டு அவளுக்கு செய்யவேண்டிய கடமைகள்ளாம் செய்துகிட்டே வாழ்க்க முழுசும் இருக்கணும். அதுக்கு பெத்தவா இருக்கணும். வரபோறவா பார்ப்பான்னு எப்படி நம்புறது. அதான் கோயில்ல குடுத்துட முடிவு செஞ்சிட்டேன். ஆனா, என் மகளுக்கு தான் கொஞ்சம் மனசுக்கு பிடிக்கல போல தெரியுது. இருந்தாலும் எம்பேச்சை மீறமாட்டான்னு தெரியும். நான் அப்படி வளக்கல அவள. ரெண்டுநாளா புத்திமதி சொல்லிட்டுதான் இருக்கேன். என்றான்... வருத்தம் நிறைந்த முகத்தோடு.

பேச்சு சத்தம்கேட்டு வீட்டிற்குள் இருந்த மகள் கதவைத் திறந்து எட்டிப்பாரத்தாள். லேசாக திறந்திருந்த கதவிடுக்கு வழியாக உற்றுப் பார்த்தாள். அவள் நிற்பதை மூவரும் கவனித்தனர்.

போய் படுத்துக்கம்மா...

இன்னும் விடியல..போ...போ... என்றான் வெள்ளையன்.

அவள் ம்....ம்..என்றபடி நகர்ந்தாள்.

சரி வெள்ளையா... உன் மகள் கோயிலில் என்னசெய்யப் போறான்னு உனக்கு நல்லா தெரியும் தானே? இரண்டு கைகளையும் திண்ணையில் ஊன்றி நிமிர்ந்து உட்கார்ந்திருந்தவன் எதையோ எண்ணி ஒரு பெருமூச்சு விட்டபடி தலையைத தாழ்த்தி நிலத்தைப்பார்த்தான்.

இங்க பாரு வெள்ளையா, தேவதாசிகள் எல்லோரும் அங்க தெய்வத்திற்கு தாசிகளாக இருப்பதாக நினைக்கிறியா? உனக்கு தெரியாத கதை ஒன்னுமில்ல... அது சரிதான்...சார்வாள். எது எப்படினாலும் சாமிக்கு செய்யும் தொண்டு தான் அதெல்லாம்.!? என்று நேருக்குநேர் பார்க்க முடியாமல் கவிழ்ந்தே பதிலாக முணுமுணுத்தான்.

இன்னும் ரெண்டு வருசம் கழித்து உன் மகளை யாருக்காவது ஒரு நல்ல பையனுக்கு கல்யாணம் செஞ்சி கொடுக்கலாம் தானே வெள்ளையா... கொஞ்சம் யோசனை செஞ்சிபாருப்பா... உபதேசியாரின் சத்தம் தேனாய் பாய்ந்தது வீட்டிற்குள் கதவோடு காதுவைத்து கேட்டுக் கொண்டிருந்த மகளுக்கு.

வெள்ளையன் மனதிற்குள் ஏதோ முள்ளால் குத்திய வலி. என்ன சொல்றிய சார்வாள். அவளை கெட்டி குடுத்துட்டு அவளுக்குசெய்ய வேண்டிய சீர் சீதனங்கள செய்ய அவள பெத்தவா இருக்கணுமுல்லா.

நான் என்ன செய்ய...

சொல்லும். வார்த்தை தடுமாறி கண்கள் கலங்கியது, அவனுக்கு.

இங்கபாரு வெள்ளையா அதெல்லாம் ஒன்னும் பெரிய விசயமில்ல. ஊருல உலகத்துல எல்லாருக்கும் சீரா செஞ்சிட்டு இருக்காவ ? அதெலாம் பார்த்துக்கல்லாம் நீ இந்த முடிவ மாத்து வெள்ளையா பாவம் உன் மகள். சாமிக்கு சேவைக்காக கோயில்ல பெண்கள் வாழ்ந்த காலம் எல்லாம் எப்பவோ முடிஞ்சு போச்சு. இப்ப ஊருக்கே பொது பொண்டாட்டியா இருக்கதான இந்த விசயமே இருந்துட்டு இருக்கு.

நாம கேள்விபடலையா? போன வருசம் கூட பதினைந்து வயசுல ஒரு பொட்ட புள்ள அதே கோயில்ல செத்து போனத பத்தி என்னென்ன பேசினாங்க எல்லாரும்? உனக்கு ஞாபகம் இல்லையா. இப்படி வெளியவே தெரியாம இன்னும் எத்தனையோ பொண்ணுங்க கோயில்ல சாகவும் முடியாம வாழவும் வழியில்லாம தவிச்சிட்டுதான் இருக்குங்க.

புரிஞ்சுக்கோ வெள்ளையா.

அதுக்கு இப்ப நான் என்ன செய்றது சார்வாள். கொஞ்சம் அவன் இறங்கியிருப்பதை அவனது உடல்மொழி உணர்த்தியது. இருந்தாலும் அவன் விடாமல் தொடர்ந்து பேசினான், என் தங்கச்சி நிலமையும் நல்லா தெரியும் உமக்கு. கல்யாணம் கெட்டிக்குடுத்து ரெண்டே வருசத்துல விதவையா வீட்டுக்கு வந்துட்டா. இனி அவள் கதை... என்னன்னு நீங்களே சொல்லுங்க. அந்த நிலமையும் எம் பொண்ணுக்கு வேண்டாம்... என்னால தாங்கமுடியாது என்றவன்.. தேக்கி வச்சிருந்த மொத்த கண்ணீரையும் கொட்டித்தீர்த்தான். தேம்பி தேம்பி அழ.... வீட்டிற்குள் இருந்தும் மகளும் மூக்கை உறிஞ்சி அழும் சத்தம்... வெளியில் கேட்டது.

ஓரிரு நிமிடங்களில் அவனை ஆறுதல் படுத்தினார் உபதேசியார். வெள்ளையா உன் மகளை நினைத்து கவலைப்படாதே. நான் அவளுக்கு பொறுப்பு.... என்ற உபதேசியாரை... என்ன சொல்லுதிய சார்வாள்.

ஆமா உன் மகளை இரண்டு வருசம் பாதுகாப்பா நாங்க பார்த்துக்கிறோம். பிறகு அவள் விரும்பினால் திருமணம் செய்து கொள்ள நாங்கள் வழி செய்கிறோம், என்றவர்,

ஏமிகார்மைக்கேலைப் பற்றின மொத்த விடயத்தையும் எடுத்து கூறினார். ப்ரீனாவைப் பற்றி கூறிய செய்திகள் அவனை நடுங்க வைத்தது. தன்மகளை அவள் இடத்தில் வைத்துப்பார்த்து சகிக்கமுடியாமல் தலையை வேகமாக ஆட்டினான்.

அய்யா... நான் கோயில்காரிகளுக்கு வாக்கு கொடுத்துட்டேன் இனி எப்படி, அது பாவமாகாதா என்றான்.

மகள் வெளியே எட்டிப்பாரத்தாள்... கதவு இன்னும் திறந்திருந்தது. முகம் முழுவதும் கண்ணீரால் அழுக்கடைந்திருந்தது... அப்பா என்றாள்.. விம்மியபடியே.

ஏறிட்டு பார்த்த வெள்ளையன் அழுகையை அடக்கமுடியாமல் பொலபொலவென அழுதான் சத்தத்தை விழுங்கி கொண்டு. அப்பா.. நான் சார்வாள் சொல்லுற அந்த அம்மா கூடவே இருக்கேன்பா. என்னை அந்த கோயிலுக்கு மட்டும் போக சொல்லாதப்பா.. என்றவள் சத்தம்போட்டு அழுதாள். சரி.. சரிம்மா.. அழாதே.... என்று எழுந்து கதவை திறந்து உள்ளே கூட்டிச் சென்று அவள் முகத்தை சட்டையால் துடைத்தான்.

அழும் சத்தம் கேட்டு அவன் தங்கை பக்கத்து குடிசையில் இருந்து வெளியில் வந்தாள். கிழக்கு வெளுக்கத் தொடங்கியிருந்தது.

உள்ள வா ராசாயி. அவள் அழுகையை அமுத்து என்றவன். வெளியே வைக்கப்பட்டிருந்த மண்பானையில் இருந்த தண்ணீரால் தன் முகத்தைக் கழுவிக் கொண்டான்.

இப்ப நான் என்ன செய்யணுமுன்னு சொல்லுங்க.. என்றான், தெளிந்த குரலில். நான் சொன்ன அந்த ஏமி அம்மா இப்ப எங்க வீட்டிலதான் இருக்காவ. என்கூட வா வெள்ளையா அவங்களோட பேசினால் உனக்கு இன்னும் தெளிவு கிடைக்கும் .

சரி. ராசாயி, தங்கத்த பார்த்துக்க. நான் வரும் வரை அவகூடையே இரு, என்று எழுந்து சென்றான்.

விடிந்து விட்டது. ஊர் அதிகாலை சலசலப்போடு இயங்கத் தொடங்கியிருந்தது. வெள்ளையனோடு உபதேசியாரும் வந்து கொண்டிருந்தார். ஏமியும் தோழியரும் எழுந்து நின்று கைக்கூப்பினர்.

அய்யோ... என்னம்மா என்னைப்போய் கும்பிட்டுக்கிட்டு..... தலை குனிந்து நின்றான், பதிலுக்கு என்ன செய்வதென்று தெரியாதவனாய். இறையாசி எப்போதும் உங்களோடு உண்டு என்றார் ஏமி. குனிந்தே நின்றவன் மேலும் குனிந்து கண்ணீரை துடைத்துக் கொண்டு நிமிர்ந்து ஏமியை பார்த்தான்.

கவலைப் படாதே... என்றார் ஏமி. அவன் ம்... என்று லேசாக தலையாட்டினான்.

அதற்குள் கேப்பைக் கூழ் காய்ச்சி பெரிய சட்டியில் கொண்டு வந்து அவர்கள் நடுவில் வைத்தாள் உபதேசியாரின் மனைவி.

முதலில் களைப்பு போக எல்லோரும் கொஞ்சம் கூழை குடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன் அம்மா என்றார் உபதேசியார். வெள்ளையா நீயும் இரு இதில் என்றார். எல்லோரும் அந்த வைக்கோலில் உட்கார்ந்து ஆளுக்கொரு சிறு குவளையில் சூடாகப் பருகினர்.

உன் மகளை தேவதாசியாக்க விரும்புகிறாயா, வெள்ளையன்? ஏமி வெடுக்கென கேட்கவும் நிமிர்ந்து பார்த்த வெள்ளையன், வேறு வழி இல்லாமல் தான் இந்த முடிவுக்கு வந்தேன். என் மகளுக்கு கொஞ்சமும் இதில் விருப்பமே இல்லை... என்றான் சோகம் நிறைந்திருந்தது அவன் ஒவ்வொரு சொல்லுக்குள்ளும். பெண்கள் முன்னால் அழுவது ஆணுக்கு அழகல்ல என்று நினைத்தவன் வந்த அழுகையை அடக்கினான்.

உனது மகளை நான் பத்திரமாக பார்த்துக் கொள்கிறேன். அவள் விரும்பினால் நானே திருமணமும் செய்து வைத்து அவளுக்கு தாயாக கடைசிவரை இருக்கிறேன். நீ எப்போது வேணுமானாலும் உனது மகளை வந்து பார்த்துக் கொள்ளலாம்.. என்றார் ஏமி.

வெள்ளையன் எழுந்து கைக்கூப்பி அடக்கி வைத்திருந்த மிச்சக் கண்ணீரையும் கொட்டி குலுங்கி குலுங்கி அழுதான். உபதேசியார் அவனை அணைத்துக் கொண்டு ஆறுதல் படுத்த.. எல்லோரும் எழுந்து அவனை ஆறுதல் படுத்த முயன்றனர்.

அழாதே... என்று ஏமி அவன் அருகில் வந்து முதுகைத் தட்டினார்.

சரி அம்மா என்றான். இப்போது தான் என் கவலையெல்லாம் இறங்கியிருக்கிறது என்றவன், நான் வீட்டிற்குபோய் அவளை இப்பவே கூட்டிக் கொண்டு வருகிறேன். அவள் உங்களோடு வர அவள் ஏற்கெனவே சம்மதித்து விட்டாள் என்றான்.

அப்படியா ....என்றார் ஏமி ஆச்சரியத்தோடு.

ஆமாம் அம்மா, நான் உங்களைப் பற்றி வெள்ளையனிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த இவன் மகள், நான் அந்த அம்மாவுடனே போய் விடுகிறேன் அப்பா என்று அழுதுச்சு... எனக்கே மனசு ஒடஞ்சி போச்சுதும்மா என்றார் உபதேசியார்.

சரி வெள்ளையா... நீ இங்கு அவளை கூட்டி வருவதைவிட நம்ம வேதக் கோயிலுக்கருகில் பிரியும் வண்டிதடத்துக் கிட்ட கூட்டிட்டு வா... அங்க நாங்க வந்து விடுகிறோம் என்றார் உபதேசியார்.

அடுத்த அரை மணிநேரத்தில்... வண்டி தேவதாசியரிடமிருந்து தப்பிய ஒரு சிறுமியைச் சுமந்து கொண்டு டோனாவூருக்கு நேராக நகர்ந்து கொண்டிருந்தது....

இதே வண்டி ஆறு மாதம் கழிந்து அவளுடைய அத்தையை அழைத்துச் செல்ல மீண்டும் இங்கு வர வேண்டியதிருக்கும் என்பது அன்று அந்த அத்தைக்கு மட்டும் தான் தெரிந்திருந்தது.

**தொடரும்...**

# வரலாற்றுச் சங்கம்

**திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகிவந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருந்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த மூன்று ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலகப் கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனிநபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1600 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடியிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு ஒரு மிஷனெரியின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனிரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் சார்பாக வரலாற்று **ஆய்வுக் கருத்தரங்கம்** நடத்துவது வரலாற்று கள ஆய்வு பயிற்சிக்கான Workshop நடத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதற்கான ஆயத்தப்பணிகள் நடந்துகொண்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in




செல்: 94433 63760, 99946 32523, 99942 25836

வாடியூர் ரோடு சுரண்டை-627859


Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401